11.08.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### எண்ணெய் நிறுவனங்களுக்கு மானிய வரம்பு நிர்ணயம்: லோக்சபாவில் மத்திய அரசு அறிவிப்பு

புதுடில்லி : எண்ணெய் நிறுவனங்களுக்கு வழங்கும் மானியத் தொகைக்கு, மத்திய அரசு உச்ச வரம்பு நிர்ணயித்துள்ளது. 'ஒரு லிட்டர் மண்ணெண்ணெய்க்கு, 12 ரூபாயும், ஒரு கிலோ சமையல் எரிவாயுவுக்கு, 18 ரூபாயும் மானியமாக அளிக்கப்படும்' என, மத்திய அரசு தெரிவித்துள்ளது.

சர்வதேச சந்தை நிலவரப்படி, பெட்ரோல் விலையை நிர்ணயித்துக் கொள்ளும் அதிகாரம், 2010 ஜூன் முதல், எண்ணெய் வினியோக நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டது; அதேபோன்று, டீசல் மீதான விலையை நிர்ணயிக்கும் அதிகாரம், 2014 முதல் அவற்றுக்கு வழங்கப்பட்டது.

### முற்றுப்புள்ளி:

சர்வதேச சந்தை நிலவரப்படி, பெட்ரோல், டீசல் விலை, மாதம் இருமுறை, எண்ணெய் நிறுவனங்களால் மாற்றி அமைக்கப்படுகிறது. இதனால், இப்பொருட்களின் விற்பனையில், பல ஆண்டுகளாக ஏற்பட்டு வந்த நஷ்டத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஆனால், சாதாரண

மக்கள் பாதிக்கப்படுவர் என்பதால், சமையலுக்கு பயன்படும் மண்ணெண்ணெய், எரிவாயு சிலிண்டர் ஆகியவை, குறைந்த விலையில் விற்கப்படுகின்றன. இதனால் ஏற்படும் இழப்பை சரிகட்ட, எண்ணெய் நிறுவனங்களுக்கு, மத்திய அரசு மானியம் வழங்கி வருகிறது. இந்நிலையில், எண்ணெய் நிறுவனங்களுக்கு வழங்கப்படும்
மானியத்துக்கு, மத்திய அரசு உச்ச வரம்பு விதித்துள்ளது.

**இதுகுறித்து, லோக்சபாவில், மத்திய எண்ணெய் துறை இணை அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறியதாவது:** பொது வினியோக முறையில், மண்ணெண்ணெய், லிட்டருக்கு, 14.96 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதன் அடக்க விலை, 29.91 ரூபாய்; இதில் உள்ள வித்தியாசம், 14.95 ரூபாய், நஷ்டமாக கருதப்படுகிறது.இதை சரிக்கட்ட, மத்திய அரசு வழங்கி வரும் மானியத்தில் உச்ச வரம்பு நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு லிட்டர் மண்ணெண்ணெய்க்கு, மத்திய அரசு, அதிக பட்சமாக, 12 ரூபாய் மானியமாக வழங்கும். மீதமுள்ள, 2.95 ரூபாய் இழப்பை, எண்ணெய் உற்பத்தி நிறுவனங்களான, ஓ.என்.ஜி.சி., ஆயில் இந்தியா போன்றவை ஏற்றுக்கொள்ளும். அதேபோன்று, வீடுகளில் பயன்படுத்தப்படும், 14.2 கிலோ எடையுள்ள, சமையல் எரிவாயு சிலிண்டர், தற்போது, 417.82 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதனால், 167.18 ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. ஒரு கிலோ சமையல் எரிவாயுவுக்கு, மத்திய அரசு, அதிகபட்சம், 18 ரூபாய் மானியமாக வழங்கும். தற்போதுள்ள நிலையில், இந்த மானியத் தொகைக்குள்ளாகவே, இழப்பு இருப்பதால், எண்ணெய் நிறுவனங்களுக்கு நஷ்டம் ஏதுமில்லை.

### பாரத் பெட்ரோலியம்:

நடப்பு, 2015 - 16ம் நிதியாண்டின் முதல் காலாண்டில், புதிய திட்டப்படி, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனுக்கு, மத்திய அரசு, 1,733 கோடி ரூபாய் மண்ணெண்ணெய் மானியத் தொகை வழங்கும்; பாரத்

பெட்ரோலியம் நிறுவனத்துக்கு, 404 கோடி ரூபாயும், இந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனத்துக்கு, 451 கோடி ரூபாயும் வழங்கும். சமையல் எரிவாயுவை பொறுத்தவரை, ஐ.ஓ.சி.,க்கு, 2,506 கோடி ரூபாயும், பாரத் பெட்ரோலியம் நிறுவனத்துக்கு, 1,155 கோடி ரூபாயும், இந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனத்துக்கு, 1,183 கோடி ரூபாயும், மத்திய அரசு மானியமாக வழங்கும். தற்போது விற்கப்படும் விலையின்படி, நடப்பு நிதியாண்டு முழுவதும், மண்ணெண்ணெய் விற்பனையால் ஏற்படும், 5,000 முதல் 6,000 கோடி ரூபாய் வரையிலான நஷ்டத்தை, எண்ணெய் நிறுவனங்கள் ஏற்கும். இவ்வாறு, அவர் கூறினார். **மத்திய அரசு வழங்கும் மானியம் குறித்து, மத்திய அரசின் மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில்,** "2015 - 16 நிதியாண்டு பட்ஜெட்டில், சமையல் எரிவாயு மானியமாக, 22 ஆயிரம் கோடி ரூபாயும், மண்ணெண்ணெய் மானியமாக, 8,000 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது," என்றார்.

## மானிய தொகை எவ்வளவு?

இந்திய மக்கள் தொகையில், பெரும்பாலானோர், நடுத்தர, ஏழை மக்களாகவே உள்ளனர். சர்வதேச சந்தைகளில் வாங்கப்படும், கச்சா எண்ணெய் சுத்திகரிக்கப்பட்டு, பெட்ரொல், டீசல், சமையல் எரிவாயு போன்ற பொருட்கள் பெறப்படுகின்றன. இப்பொருட்களை, அடக்க விலைக்கு விற்றால் கூட, சாமானிய மக்களால் வாங்க முடியாத நிலை உள்ளது. எனவே, மத்திய அரசு, மானிய விலையில், வீடுகளுக்கு தேவைப்படும் அத்தியாவசிய பொருட்களை வழங்குகிறது. மத்திய அரசின் பட்ஜெட்டில், ஆண்டுதோறும், 3.5 லட்சம் கோடி ரூபாய்க்கு அதிகமாக, மானியத்துக்காக செலவிடப்படுகிறது. மத்திய அரசின் உணவு பாதுகாப்பு திட்டங்களுக்காக, 1.25 லட்சம் கோடி ரூபாயும், விவசாயிகளுக்கு உர மானியமாக, 66 ஆயிரம் கோடி ரூபாயும்

வழங்கப்படுகிறது.

மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு விற்பனையில், நஷ்டத்தை ஈடுசெய்ய, மத்திய அரசு வழங்கும் மானியத்துக்கு, உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டு முழுவதும், மண்ணெண்ணெய் விற்பனையால் ஏற்படும், 5,000 முதல் 6,000 கோடி ரூபாய் வரையிலான நஷ்டத்தை, எண்ணெய் நிறுவனங்கள் ஏற்கும்.

## காவிரியில் தண்ணீர் திறந்ததால் 274 'மெகாவாட்' மின் உற்பத்தி



மேட்டூர்: மேட்டூர் அணையில் இருந்து, டெல்டா பாசனத்துக்காக, காவிரியில், 13 ஆயிரம் கன அடி நீர் திறக்கப்பட்டுள்ளதால், நீர்மின் நிலையங்கள் மூலம், 274 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. டெல்டா பாசனத்துக்காக, சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் இருந்து, நேற்று முன்தினம் முதல், வினாடிக்கு, 13 ஆயிரம் கன அடி நீர், காவிரியில் திறக்கப்பட்டுள்ளது. 1,000 கன அடி, அணை மின் நிலையம் வழியாகவும், 12 ஆயிரம் கன அடி, சுரங்க மின் நிலையம் வழியாகவும் வெளியேற்றப்படுகிறது.இதனால், அணை மின் நிலையத்தில், 10 மெகாவாட், சுரங்கமின் நிலையத்தில், 120 மெகாவாட்

மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. காவிரி குறுக்கே, செக்கானூர், நெருஞ்சிப்பேட்டை, ஊராட்சிகோட்டை உள்ளிட்ட, ஏழு இடங்களில், தலா, 30 மெகாவாட் உற்பத்தி திறன் கொண்ட, தடுப்பணை மின் உற்பத்தி நிலையங்கள் உள்ளன.இவற்றில், செக்கானூரில், 12 மெகாவாட், இதர ஆறு கதவணை மின் நிலையங்களில் தலா, 22 மெகாவாட் என, மொத்தத்தில், 274 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்பட்டது.இதனால், நேற்று காலை, மாநிலத்தின் ஒட்டுமொத்த நீர்மின் நிலையங்களின் மின் உற்பத்தி, 1,310 மெகாவாட்டாக அதிகரித்துள்ளது.

## 500 சூரியசக்தி மின் மோட்டார்கள் விவசாயிகளுக்காக வாங்க முடிவு

சென்னை: வேளாண் துறை மற்றும் தோட்டக்கலைத் துறை சார்பில், 80 சதவீத மானியத்தில், சூரிய சக்தி மின் மோட்டார்கள், 2013 முதல் வழங்கப்படுகின்றன. நடப்பாண்டில், வேளாண் பொறியியல் துறை சார்பில், விவசாயிகளுக்கு, 500 சூரிய சக்தி மின் மோட்டார்கள் வழங்க, 25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு உள்ளது. இந்த நிதியில், ஐந்து குதிரை திறனுடைய, 500 மின் மோட்டார்கள் வாங்க, 'டெண்டர்' கோரப்பட்டு உள்ளது. இத்திட்டத்தின் கீழ், விவசாயிகள், 1.05 லட்சம் ரூபாய் செலுத்த வேண்டும்; மானியமாக, 3.80 லட்சம் ரூபாயை, அரசு வழங்கும்.

**விலை சரிவால் திண்டுக்கல் பகுதியில் வாடுது ஜாதிமல்லி**



திண்டுக்கல்: விலை சரிவால் திண்டுக்கல் பகுதியில் ஜாதிமல்லி பூக்கள் பறிக்காமல் செடிகளில் விடப்பட்டன.திண்டுக்கல் அருகே கொடைரோடு, நிலக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் ஜாதிமல்லி பயிரிடப்படுகிறது. இங்கு விளையும் பூக்கள் திண்டுக்கல், நிலக்கோட்டை மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படுகிறது. 'சென்ட்' நிறுவனங்களுக்கு தேவை அதிகரித்ததால் விவசாயிகள் அதிகளவில் ஜாதிமல்லியை பயிரிட்டனர்.தற்போது பூக்களின் விளைச்சல் அதிகரித்துள்ளது. இதனால் “சென்ட்' நிறுவனங்கள் ஜாதிமல்லியை குறைந்த விலைக்கு வாங்குகின்றன. சென்ற மாதம் ரூ.250 க்கு விற்கப்பட்ட ஜாதிமல்லி ரூ.100 ஆக சரிந்துள்ளது. பறிப்பு கூலிக்கு கூட விலை கிடைக்காததால் விவசாயிகள் பறிக்காமல் செடிகளிலே விட்டுள்ளனர்.கொடைரோடு விவசாயி சாமுவேல் கூறியதாவது: பூக்களை பறிக்க கிலோவிற்கு ரூ.150 கூலி கொடுக்க வேண்டியுள்ளது. கிலோவிற்கு ரூ.100 மட்டுமே விலை கிடைக்கிறது. பூக்களை பறிக்காமல் விட்டுள்ளோம்.

## தரமற்ற நெல் விதையால் விளைச்சல் இல்லை:இழப்பீடு கோரி விவசாயிகள், கலெக்டரிடம் மனு

கடலூர்:தரமற்ற விதை நெல்லை விற்பனை செய்த நிறுவனத்திடமிருந்து இழப்பீட்டு தொகையை பெற்றுத் தரக்கோரி விவசாயிகள், கலெக்டரிடம் மனு கொடுத்துள்ளனர். இதுகுறித்து, விருத்தாசலம் அடுத்த சாத்தப்பாடி கிராமத்தைச் சேர்ந்தவர்கள் மூர்த்தி, வாசுதேவன், ராஜ்குமார். விவசாயிகளான இவர்கள் தங்களுக்கு சொந்தமான 46 ஏக்கரில் குறுவை பட்டத்தில் நெல் பயிரிடுவதற்காக கத்தாழை கிராமத்தில் உள்ள தனியார் ஏஜன்சியில் கிலோ 30 ரூபாய் வீதம் 1,380 கிலோ ஏ.டி.ட்டி-37 ரக நெல் விதைகளை கடந்த ஏப்ரல் 7ம் தேதி வாங்கி, நாற்று விட்டனர். அதனைப் பிடுங்கி, மே மாதம் 10ம் தேதி நடவு செய்து, அடியுரம், களையெடுப்பு, மேலுரம், பூச்சிக்கொல்லி மருந்து, தண்ணீர் பாய்ச்ச என மொத்தம் ஒரு லட்சத்து 32 ஆயிரத்து 100 செலவு செய்த நிலையில், அறுவடை காலமான 105 நாளைக் கடந்த பிறகும் இதுவரை பயிர் பூ பூக்கவே இல்லைஇதனால், பாதிக்கப்பட்ட விவசாயிகள், பயிரை ஆய்வு செய்து, தரமற்ற விதையைக் கொடுத்து, நஷ்டத்திற்கு ஆளாக்கிய நிறுவனத்திடமிருந்து உரிய இழப்பீட்டு தொகையை பெற்றுத்தரக்கோரி கடந்த 3ம் தேதி கலெக்டரிடம் மனு கொடுத்தனர்.ஒரு வாரம் ஆகியும் நடவடிக்கை இல்லாததால், மூன்று விவசாயிகளும் தங்கள் நிலத்தில் செழித்து வளர்ந்து, பூ பூக்காமல் உள்ள நெற் பயிர்களுடன் நேற்று மீண்டும் கலெக்டரை சந்தித்து மனு கொடுத்தனர்.மனுவை பெற்றுக் கொண்ட கலெக்டர் சுரேஷ்குமார், இதுகுறித்து பயிர்களை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேளாண் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மின்விசிறியுடன் வந்த மூதாட்டி:கடலூர், பழைய கலெக்டர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் வாராந்திர குறைகேட்புக் கூட்டம் நடந்தது. அப்போது, கடலூர் முதுநகர் அடுத்த சின்னகாரைக்காடு

கிராமத்தைச் சேர்ந்த அமாவாசை மனைவி அஞ்சலை, 60; என்பவர், தமிழக அரசு வழங்கிய விலையில்லா மின்விசிறியுடன் வந்து, "கடந்த மாதம் கொடுத்த மின்விசிறி இயங்கவில்லை. மின்விசிறியை வழங்கிய அமைச்சர், பழுதானால், கலெக்டர் அலுவலகத்தில் சரி செய்து கொடுப்பார்கள் எனக் கூறினார். அதனால், மின்விசிறியை எடுத்து வந்தேன்' என வெல்லந்தியாக அதிகாரிகளிடம் கூறினர். அதனைத் தொடர்ந்து மூதாட்டி கொண்டு வந்த பழுதடைந்த மின்விசிறியை சரி செய்து வழங்க நடவடிக்கை மேற்கொண்டனர்.

## 21ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

காஞ்சிபுரம்:காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும், 21ம் தேதி, நடைபெற உள்ளது.இதுதொடர்பாக, மாவட்ட ஆட்சியர் சண்முகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கான, குறைதீர் கூட்டம், வரும், 21ம் தேதி, வெள்ளிக்கிழமை காலை, 11:00 மணிக்கு நடைபெற உள்ளது. மாவட்ட ஊராட்சி முகமை கூட்டரங்கில், ஆட்சியர் தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்தில், விவசாயிகள் கலந்து கொண்டு, வேளாண் துறை மட்டுமல்லாமல், அதன் சார்பு துறை தொடர்பான புகார்களை நேரடியாகவும், மனுவாகவும் தெரிவிக்கலாம்.இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## மாஞ்செடி உற்பத்தி ஜோர்: பலருக்கு வேலை வாய்ப்பு

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டம், சந்தூரில் மாஞ்செடிகள் உற்பத்தி செய்வதன் மூலம், ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.

மாங்கனி மாவட்டம் என்று அழைக்கப்படும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில், மா சாகுபடி முக்கிய தொழிலாக உள்ளது. மாவட்டத்தில், 40 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் மா சாகுபடி செய்யப்படுகிறது. மாவட்டத்தில் இருந்து, வெளி மாநிலங்களுக்கு அதிகளவில் மாஞ்செடிகள் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.

போச்சம்பள்ளி, சந்தூர், பட்டகப்பட்டி, ஜெகதேவி, தொகரப்பள்ளி உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் மட்டும், 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மாஞ்செடிகள் உற்பத்தி செய்யப்படுகிறது. இத்தொழிலில் மட்டும், 5,000 குடும்பங்கள் ஈடுபட்டுள்ளன.கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள், மாங்கூழ் உற்பத்தி தொழிற்சாலையிலிருந்து, மாங்கொட்டைகளை டன் கணக்கில் வாங்கி வந்து விதைக்கின்றனர். அந்த மாங்கொட்டைகள், ஓராண்டிலிருந்து, இரண்டு ஆண்டு வளரும். அவ்வாறு வளரும் செடிகளை, வேருடன் எடுத்து, மாஞ்செடி உற்பத்தி செய்யப்படுவதற்காக, தயார் செய்ய பிரத்யேக மண் சட்டிகளில் வைக்கின்றனர். இந்த செடிகளுக்கு, 45 நாட்கள் காலை, மாலை என, இரண்டு முறை தண்ணீர் விடுகின்றனர். பின்னர், அந்த மண் சட்டியில் உள்ள செடிகளை கொண்டு, ஏற்கனவே நன்கு வளர்ந்துள்ள தாய் செடியில் உள்ள கிளைகளை வெட்டி சீவி, புதிய செடியில் இணைத்து தண்ணீர் புகா வண்ணம் பிளாஸ்டிக் கொண்டு கட்டி விடுகின்றனர். ஒவ்வொரு தாய் செடியிலிருந்தும் குறைந்தபட்சம், 10 செடிகள் உற்பத்தி செய்கின்றனர். இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் வீரிய ஒட்டுரக மாங்கன்றுகள் விற்பனை செய்யப்படுகிறது. மாங்கன்றுகள் பெங்களூரா, செந்தூரா, பைனப்பள்ளி, காலப்பட், பங்கனப்பள்ளி, மல்கோவா என பல

ரகங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது. ஒரு மாங்கன்றின் விலை சீஸனை பொறுத்தும், ரகத்தை பொறுத்தும் விற்பனை செய்யப்படுகிறது. தமிழகம் மட்டுமன்றி ஆந்திரா, கர்நாடகா, புதுச்சேரி, கேரளா உள்படவெளி மாநிலங்களிலிருந்தும் விவசாயிகள் நேரடியாக கிருஷ்ணகிரிக்கு வந்து மாங்கன்றுகளை வாங்கி வாகனங்கள் மூலம் ஏற்றி செல்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும், ஜூலை முதல் அக்டோபர் வரை மாங்கன்றுகள் விற்பனை தீவிரமாக நடக்கும். இதன் மூலம் ஆண்டிற்கு, 20 கோடி வரை வர்த்தகம் நடைபெறுகிறது. மாங்கன்றுகள் வளர்ப்பு, விற்பனை மூலம் சந்தூர் சுற்று வட்டாரத்தை சேர்ந்த, ஆயிரக்கணக்கான விவசாய தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர்.

## வெளி மாநிலங்களுக்கு செல்லும் புதினா வருவாய் கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி

ஓசூர்: ஓசூரில் சாகுபடி செய்யப்படும் புதினா, வெளி மாநிலங்களுக்கு, விற்பனை செய்யப்பட்டு வருவதுடன், ஒரு கட்டு, 5 ரூபாய் வரை விற்பனையாவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை தாலுகாவில், 400 ஹெக்டர் பரப்பளவில் புதினா சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. ஓசூர், சூளகிரி பகுதி விவசாயிகள் அதிகளவு புதினா சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.எல்லா வகை சமையலிலும் மணமும், சுவையும் கொடுக்க பயன்படுத்தப்படும் புதினா, ஓசூர் பகுதியில் அதிகளவு சாகுபடி செய்யப்படுவதால், கர்நாடகா மாநிலம் பெங்களூரு, மைசூரு மற்றும் கேரளாவிற்கு அதிகளவு விற்பனை செய்யப்படுகிறது. அத்துடன் கோவை, திருச்சி போன்ற மாவட்டங்களுக்கு அதிகளவில் விற்பனைக்கு செல்கிறது.இதனால், புதினா சாகுபடியில் விவசாயிகளுக்கு அதிகளவு வருவாய் கிடைக்கிறது. நேற்றைய நிலவரப்படி ஒரு கட்டு புதினா அதிபட்சமாக, 5 ரூபாய்

வரையும், 400 கட்டு கொண்ட, ஒரு மூட்டை புதினா, அதிகபட்சமாக, 2,000 ஆயிரம் வரை விற்பனையானது. மேலும், ஒரு ஏக்கரில், 4,800 கிலோ அளவிற்கு புதினா சாகுபடி செய்ய முடியும் என்பதால், விவசாயிகள் பலர் புதினா சாகுபடியை விரும்பி செய்கின்றனர்.இது குறித்து, ஓசூர் அடுத்த மாசிநாயக்கனப்பள்ளியை சேர்ந்த விவசாயி சத்தியநாராயணாரெட்டி கூறியதாவது:

கர்நாடகா மாநிலம் மைசூரு, பெங்களூரு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள ஹோட்டல்களில் புதினா சட்னி இல்லாமல் காலை, மாலை டிபன் தயார் செய்யப்படுவதில்லை. ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை பகுதியில் இருந்து கர்நாடகா மாநிலம் மிகவும் அருகாமையில் அமைந்துள்ளதால் இங்கிருந்து அதிகளவு புதினா விற்பனை செய்யப்படுகிறது.

செலவு குறைவு, வருவாய் அதிகம் என்பதால், விவசாயிகள் தங்களது குடும்பத்தினர் உதவியுடன் புதினா சாகுபடியில் ஈடுபடுகின்றனர். புதினாவிற்கு போதிய அளவில் விலை கிடைத்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பல்வேறு மருந்துகளில் புதினா எண்ணெய் சேர்க்கப்படுவதால், இதற்கு எப்போதும் வரவேற்பு உள்ளது. இது தவிர அழகு சாதன பொருட்கள், சோப்பு, தலைவலி மருந்து, கிரீம்கள் போன்றவற்றிலும் புதினா சேர்க்கப்படுகிறது. புதினாவில், சில இடங்களில் வெள்ளை பூச்சி அல்லது புரோட்டான் கருப்பு புழு தாக்குதல் இருந்தால் மருந்து தெளிக்கலாம். 60 நாட்களில் புதினா பறிக்கும் நிலைக்கு தயாராகி விடும்.இவ்வாறு அவர் கூறினார்.

## குளிரிலும் வளருமா 'கோ.ஆர்.51' நெல்?கூடலூர் ஆராய்ச்சி மையத்தில் சோதனை

கூடலுார்;கோவை வேளாண் பல்கலைக் கழகம் உருவாக்கிய, 'கோ.ஆர்.-51' என்ற புதிய ரக நெல், கூடலுார் ஆராய்ச்சி மையத்தில், சோதனை

முறையில் பயிரிடப்பட்டது.கோவை வேளாண் பல்கலைக்கழகம், கடந்த ஆண்டு உருவாக்கிய, கோ.ஆர்.- 51 என்ற புதிய நெல் ரக விதைக்கு, மத்திய ஆராய்ச்சி கழகம் 'தரமான விதை ரகம்' என, அங்கீகாரம் வழங்கியது. இதை தொடர்ந்து, புதிய ரக நெல் விதை விற்பனை, அனைத்து மாநிலங்களிலும் துவங்கப்பட்டுள்ளது.இதன் ஒரு பகுதியாக, நீலகிரி மாவட்டம் கூடலுார் வேளாண் பல்கலைக் கழகத்தின், வீரிய ஒட்டு நெல் ஆராய்ச்சி மையத்தில், சோதனை முறையில், புதிய ரக நெல் விதை பயிரிடப்பட்டுள்ளது.கூடலுார் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் மனோன்மணி கூறுகையில், “கோ.ஆர். -51, என்ற புதிய ரக நெல், அனைத்து பருவங்களுக்கும் ஏற்றது. இவை, பூச்சி, நோய் தாக்கத்தை எதிர்த்து வளர்ந்து, 105 நாட்களில் அதிக விளைச்சல் தர கூடியது. நீலகிரி ஆராய்ச்சி மையத்தில், சோதனை முறையில் பயிரிட்டுள்ளோம். அடுத்த ஆண்டு புதிய ரக நெல் விதைகள் கோவையிலிருந்து வரவழைக்கப்பட்டு, நீலகிரி விவசாயிகளுக்கு வழங்கப்படும்,” என்றார்.

## 42ல் 25 வகை காய்கறிகள் கிலோ ரூ.10க்கும் குறைவாக விற்பனை; ஒட்டன்சத்திரம் விவசாயிகள் விரக்தி

ஒட்டன்சத்திரம் : ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் 42 வகையான காய்களில் 25 வகை காய்கறிகள் கிலோ ரூ.10க்கும் கீழ் விற்பதால் விவசாயிகள் விரக்தி அடைந்துள்ளனர்.

ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் காய்கறிகள் அதிகமாக விளைவிக்கப்படுகிறது. அறுவடை செய்யப்பட்ட காய்களை விற்ற ஏற்ற சந்தை, அருகில் உள்ளதால் சுறுசுறுப்புடன் செயல்பட்டு வருகிறது. கடந்த 2 ஆண்டுகளாக இப்பகுதியில் பருவமழை

பொய்த்ததால் காய்கறி உற்பத்தி பாதிக்கப்பட்டது. இருந்த போதிலும் வெளி மாநிலங்களில் விளைந்த காய்கள் இங்கு கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்பட்டது.மூன்று மாதங்களுக்கு முன்பு பெய்த கோடை மழையை பயன்படுத்தி, இப்பகுதி விவசாயிகள் முருங்கை, கத்தரி, தக்காளி, வெண்டை உள்ளிட்ட காய்களை ஆர்வமுடன் பயிரிட்டனர். அவை தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகிறது. ஆனால் மார்க்கெட்டில் விலை மிகவும் குறைவாக உள்ளது.ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் 42 வகை காய்கறிகள் தினமும் விற்பனையாகிறது. இவற்றில் 25 வகை காய்கறிகளின் ஒரு கிலோ விலையானது ரூ.10க்கும் குறைவாக விற்கிறது.

அவற்றின் விபரம்: செடி முருங்கை ரூ.8, கரும்பு முருங்கை ரூ.7, மரம் முருங்கை ரூ.6, பொறியல் தட்டப்பயிர் ரூ.8, பீர்க்கை, பீட்ரூட் தலா ரூ.10, புடலை ரூ.8, முள்ளங்கி ரூ.7, தக்காளி ரூ.3, கத்தரி(டிஸ்கோ) ரூ.6, கத்தரி (பச்சை) ரூ.8.30, வெண்டைக்காய் ரூ.4, சுரைக்காய் ரூ.5, சாம்பார் வெள்ளரி ரூ.2, கோவக்காய் ரூ.10, தேங்காய் ரூ.7, பூசணி வெள்ளை (சுனாமி) ரூ.4, பூசணி வெள்ளை (இளவன்) ரூ.8, பூசணி சிவப்பு (அர்ஜூனா மற்றும் நாட்டு ரகம்) தலா ரூ.5, சவ் சவ் ரூ.8, கொத்தவரை ரூ.7, தம்பட்ட அவரை ரூ.6, வாழை நாட்டு ரகம் ரூ.10, சப்போட்டா ரூ.8. பல காய்களின் தற்போதைய விற்பனை விலையானது, செடிகளில் இருந்து பறித்தெடுக்கும் கூலிக்குக் கூட கட்டுபடியாகவில்லை. எனவே விவசாயிகள் விரக்தி அடைந்துள்ளனர்.

## தாண்டிக்குடியில் சாரல் மழை

தாண்டிக்குடி : தாண்டிக்குடி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதியில் நேற்று சாரல் மழை பெய்தது.கடந்த சில வாரங்களாக வறண்ட வானிலை

நீடித்து வெயிலின் தாக்கம் அதிகரித்தும், இரவில் பனியால் குளிர் நிலவுகிறது. நேற்று மதியம் முதல் லேசான சாரலுடன் காற்றில் ஈரப்பதம் அதிகரித்து காணப்பட்டது. வானம் மேகமூட்டத்துடன் மாலை வரை சாரல் நீடித்து கொண்டே இருந்தது. கனமழை பெய்தால் ஏற்றதாக அமையும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

### தென்காசி பல்லாரி வெங்காயம் ஒட்டன்சத்திரத்தில் விற்பனை

ஒட்டன்சத்திரம் : உள்ளூர் வரத்து முற்றிலும் இல்லாததால், தென்காசி பகுதியில் விளைந்த பல்லாரி வெங்காயம் ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றி உள்ள பகுதிகளில் பல்லாரி வெங்காயம் நடப்படாததால், தற்போது மார்க்கெட்டில் வரத்து சிறிதளவு கூட இல்லை. பிற மாநிலங்களில் இருந்து தருவிக்கப்பட்ட பல்லாரி கிலோ ரூ.40க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதிக தூரத்தில் இருந்து வருவதால் விலை அதிகமாக உள்ளதாக கூறப்படுகிறது.இந்நிலையில் தென்காசி பகுதியில் தற்போது பல்லாரி அறுவடை செய்யப்பட்டு வருகிறது. விலையும் குறைவாக இருப்பதால் இங்குள்ள வியாபாரிகள் அங்கு சென்று மொத்தமாக கொள்முதல் செய்து ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கின்றனர். இந்த வெங்காயம் கிலோ ரூ,.25லிருந்து ரூ.32 வரை விற்பனை செய்யப்படுகிறது.

### வேப்பமுத்து விலை குறைவால் சேகரிப்பில் ஆர்வம் இல்லாத மக்கள்

ஆண்டிபட்டி : ஆண்டிபட்டி பகுதியில் இந்த ஆண்டு வேப்ப முத்துக்கள் விளைச்சல் குறைந்துள்ளது. இதனால் வேப்ப முத்துக்கள் சேகரிப்பு தொழிலை பலரும் கைவிட்டுள்ளனர்.ஒவ்வொரு ஆண்டும் கோடையில்

வேப்ப மரங்கள் பூத்துக்குலுங்கும். ஜூனில் துவங்கி செப்டம்பர் வரை வேப்பமரங்களில் அதிகப்படியான காய்கள், பழங்கள் காய்த்துக்குலுங்கும். வேப்பமரத்தின் அனைத்து பாகங்களும் மருத்துவ குணம் கொண்டிருந்தாலும், வேப்ப எண்ணெய், உரங்கள் தயாரிக்க வேப்ப முத்துக்கள் பயன்படுத்தப்படுகிறது.ஒவ்வொரு ஆண்டும் சீசன் காலத்தில் ஆண்டிபட்டியின் பல்வேறு கிராமங்களில் உள்ள ஆயிரக்கணக்கான மரங்களில் இருந்து வேப்ப முத்துக்கள் சேகரிக்கப்படும். சிறுவர்கள், வயதானவர்கள், பெண்கள் உட்பட சிலர் முழு நேரமாகவும், பகுதி நேரமாகவும் வேப்ப முத்துக்கள் சேகரிக்கும் தொழில் மேற்கொள்வர். இந்த ஆண்டு வேப்பமரங்களில் காய்ப்புத்தன்மை குறைந்துள்ளதால் வேப்ப முத்துக்கள் வரத்தும் குறைந்துள்ளது.

வேப்பமுத்து வியாபாரி ராதாகிருஷ்ணன் கூறியதாவது:ஆண்டிபட்டி பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் நூறு டன் அளவுக்கு வேப்ப முத்துக்கள் கிடைக்கும். கடந்த ஆண்டு இதே நாளில் கிடைத்த அளவில் தற்போது மூன்றில் ஒரு பங்கு கூட வரத்து இல்லை. கடந்த கோடையில் பெய்த மழையில் வேப்ப மரங்களில் இருந்த பூக்கள் பெருமளவு உதிர்ந்து விட்டது. இதனால் காய்ப்புத்தன்மை குறைந்து விட்டது. மேலும் வேப்ப மரங்களின் எண்ணிக்கையும் ஒவ்வொரு ஆண்டும் குறைந்து வருகிறது. வேப்ப முத்துக்கள் கிலோ ரூபாய் 10 க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. குறைவான விலையால் போதுமான வருவாய் இன்றி பலரும் வேப்பமுத்து சேகரிப்பதை கைவிட்டுள்ளனர், என்றார்.

**"கார்ப்பைட்' கல் வைத்து பழுக்க வைக்கப்படும் மாங்காய்கள்**

பெரியகுளம் : பெரியகுளம் பகுதியில் சில மாங்காய் குடோனில் கார்ப்பைட் கல் வைத்து மாங்காய்கள் வெளியூர்களுக்கு அனுப்பப்படுகிறது. இதை நகராட்சி சுகாதரத்துறை அலுவலர்கள் கண்காணித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கேரளாவில் ஓணம் பண்டிகையை முன்னிட்டு, பெரியகுளம் பகுதியில் மாங்காய் சீசன் களை கட்டியுள்ளது. மாங்காய் குடோன்களிலிருந்து குஜராத், கேரளா உட்பட வெளிமாநிலங்களுக்கும், தேனி, மதுரை, திண்டுக்கல், விருதுநகர், சென்னை உட்பட தமிழகத்தின் பிற பகுதிகளுக்கு தினமும் பெட்டிகளில் லாரிகள் மூலம் மல்கோவா, அல்போன்சா, செந்தூரம், காளைபாடி, நீலம், காசாகாய் உள்ளிட்ட மாங்காய்கள் அனுப்பப்படுகிறது. சீசன் முடியும் நிலையிலும், கேரளாவில் ஓணம் பண்டிகையை முன்னிட்டு கேரளாவிற்கு அதிகளவில் காசாகாய் அனுப்பப்படுகிறது. சில மாங்காய் வியாபாரிகள், மாங்காய் பெட்டிகளில் "கார்பைட்' கல் பொட்டலங்களை வைத்து அனுப்புகின்றனர். "கார்பைட்' கல் வைப்பதால் மாங்காய் விரைவில் பழுக்கும். அதே நேரத்தில், கார்பைட் கல்லில் பழுக்கும் மாம்பழங்களை சாப்பிடுவதால், வயிற்று வலி ஏற்பட்டு உடலுக்கு தீங்கு விளைவிக்கும். மாங்காய் குடோன்களிலிருந்து கார்பைட் கல் வைத்து அனுப்பப்படுவது குறித்து நகராட்சி சுகாதாரப்பிரிவு அலுவலர்கள், சோதனை செய்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

### விவசாயிகள் குறைதீர் கூட்டம்

சிவகங்கை: சிவகங்கையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆகஸ்ட் 21ம் தேதி காலை 11 மணிக்கு கலெக்டர் அலுவலகத்தில் நடைபெறும். கலெக்டர் எஸ்.மலர்விழி தலைமையில் நடக்கும் கூட்டத்தில்

விவசாயிகள், பொதுமக்கள் பங்கேற்று அத்துறை சார்ந்த புகார், கோரிக்கைகளை தெரிவிக்கலாம்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை

தினமணி

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**விவசாயிகளுக்கு விழிப்புணர்வு முகாம்**

திருவள்ளூரை அடுத்த திரூரில் இயங்கி வரும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் சார்பில் விவசாயிகளுக்கு காரீப் முன்பருவம் குறித்த விழிப்புணர்வு முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த முகாமுக்கு திருவள்ளூர் தொகுதி எம்பி வேணுகோபால் தலைமை வகித்தார். இதில் தமிழக பால்வளத்துறை அமைச்சர் பி.வி.ரமணா பங்கேற்று காரீப்ஹஹ்ஜீ முன்பருவ விழிப்புணர்வு கையேட்டை வெளியிட்டு சிறப்புரை ஆற்றினார். முகாமில், பூந்தமல்லி எம்எல்ஏ மணிமாறன், வேளாண்மை இணை இயக்குநர் பாபு, திருவூர் நெல் ஆராய்ச்சி நிலையத் தலைவர் அகிலா ஆகியோர் காரீப் முன்பருவம் குறித்து பேசினர்.இதில், மாவட்ட ஊராட்சித் தலைவர் ரவிச்சந்திரன், ஒன்றியக் குழுத் தலைவர் புட்லூர் சந்திரசேகர், தோட்டக்கலை துணை இயக்குநர் ஜெயலட்சுமி, பேராசிரியர்கள் ஜெகதாம்பாள், மணிமேகலை, கோபால், சதாசக்தி, தேவநாதன் உள்பட பலர் பங்கேற்றனர்.

உதவி பேராசிரியர் மணிமாறன் நன்றி கூறினார்.

**தமிழகம், புதுச்சேரியில் இன்று மழைக்கு வாய்ப்பு**

வெப்பச் சலனம் காரணமாக தமிழகம், புதுச்சேரியில் செவ்வாய்க்கிழமை ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.=இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறியதாவது: வெப்பச் சலனம் காரணமாக, கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக தமிழகம், புதுச்சேரியில் இடியுடன் கூடிய மழை பெய்து வருகிறது. குறிப்பாக, சென்னை, புறநகர்ப் பகுதிகளில் மாலை அல்லது இரவு நேரத்தில் இடியுடன் கூடிய மழை பெய்து வருகிறது. வெப்பச் சலனம் நீடிப்பதால், தமிழகம், புதுச்சேரியில் செவ்வாய்க்கிழமையும் இடியுடன் கூடிய மழை ஓரிரு இடங்களில் பெய்யும். அடுத்து வரும் இரண்டு நாள்களுக்கும் தமிழகம், புதுச்சேரியில் பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மாநகரைப் பொருத்த வரை, வானம் ஒரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும். சென்னை நகரின் அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரியாக இருக்கும். கடந்த 24 மணி நேரத்தில் வேலூர் மாவட்டம்- வாலாஜா, காஞ்சிபுரம் மாவட்டம்- மகாபலிபுரம், நீலகிரி மாவட்டம்- தேவாலா, நடுவட்டம், கோவை மாவட்டம்- வால்பாறை ஆகிய இடங்களில் 10 மி.மீ. மழை பதிவானதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**பிரையண்ட் பூங்காவில் மலர்ச் செடிகள் நடவுப் பணி தொடக்கம்**

கொடைக்கானலில் 2ஆம் சீசனை முன்னிட்டு பிரையண்ட் பூங்காவில் மலர்ச் செடிகள் மற்றும் விதைகள் நடவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. கொடைக்கானலில் 2 ஆம் சீசன் ஆகஸ்ட் மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை இருக்கும். இதற்காக தோட்டக் கலைத் துறை

சார்பில் கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில் புதிய மலர்ச் செடிகள், விதைகள் நடவு செய்யப்பட்டு வருகின்றன.

இதுகுறித்து தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் கிஷோர்குமார் கூறியது: பிரையண்ட் பூங்காவில் 30 ஆயிரம், செட்டியார் பூங்காவில் 20 ஆயிரம் என கேலண்டூலா, லூபின்ஸ், ஸ்வீட் வில்லியம், சாப்ராணியா, கலிபோனியா பாபி, கஜாரியா போன்ற மலர்ச் செடிகள் 25 மலர் பாத்திகளில் நடவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கெனவே பூங்காவில் நீண்ட கால மலர்களான ஆந்தோரியம், பேன்சி, ரோஜா உள்ளிட்ட ஆயிரக்கணக்கான மலர்கள் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து வருகின்றன. தற்போது நடவு செய்யப்பட்ட மலர்ச் செடிகளிலிருந்து ஒரு லட்சம் முதல் ஒரு லட்சத்து 50 ஆயிரம் மலர்கள் பூத்துக் குலுங்கி சுற்றுலாப் பயணிகளைக் கவரும். மேலும் சிறுவர் பூங்காவிலுள்ள சில விளையாட்டு உபகரணங்கள் சேதமடைந்துள்ளன. அவை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

**ஒட்டன்சத்திரம் சந்தையில் காய்கறி விலை வீழ்ச்சி**

ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தையில் காய்கறி விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

ஒட்டன்சத்திரம் சந்தையில் காய்கறி வரத்து அதிகரித்தது. இதனால் அவற்றின் விலையும் சரிந்தது. சந்தையில் திங்கள்கிழமை விலை நிலவரம்:(கிலோவில்) முருங்கை (செடி)ரூ.8, முருங்கை (கரும்பு)ரூ.7, முருங்கை (மரம்)ரூ.6, பொறியல் தட்டைப்பயிர் ரூ.8, சுரைக்காய் ரூ.5, புடலங்காய் ரூ.8, முள்ளங்கி ரூ.7, வெண்டைக்காய் ரூ.4, சாம்பார்

வெள்ளரி ரூ.2, பூசணிக்காய் (சுனாமி)ரூ.4, இளவன் ரூ.8, அர்ஜூனா ரூ.5, நாட்டு ரகம் ரூ.5, கொத்தவரை ரூ.8, செள செள ரூ.8, அவரை ஒட்டு ரகம் ரூ.12, தம்பட்ட அவரை ரூ.6, கோழி அவரை ரூ.12, பட்ட அவரை ரூ.20, பெல்ட் அவரை ரூ.20, பீன்ஸ் ரூ.1, பாகற்காய் ரூ.17, பீர்க்கங்காய் ரூ.10, பீட்ரூட் ரூ.10, பல்லாரி வெங்காயம் ரூ.25 முதல் 32, சின்ன வெங்காயம் ரூ.18 முதல் 30, காளிபிளவர் (20 பூ)ரூ.170, தக்காளி (14 கிலோ) பெட்டி ஒன்று ரூ.45, கத்தரி டிஸ்கோ (30 கிலோ)ரூ.180, கத்தரி பச்சைரகம் (30 கிலோ)ரூ.250, கோவைக்காய் ரூ.10 முதல் 21 வரை, மிளகாய் சம்பா ரூ.20, உருண்டை ரூ.28, மாங்காய் கல்லாமை ரூ.50, உருட்டு ரூ.40, வாழை நாடு ரூ.8, நெல்லி ரூ.14, எலுமிச்சை ரூ.40 என விற்பனையானது.

**பொள்ளாச்சியில் ஆடுவதைக் கூடம் திறப்பு**

பொள்ளாச்சி காந்தி மார்க்கெட் அருகே புதுப்பிக்கப்பட்ட ஆடுவதைக் கூடத்தை நகர்மன்றத் தலைவர் கிருஷ்ணகுமார் திங்கள்கிழமை திறந்து வைத்தார்.பொள்ளாச்சி நகராட்சிக்கு உள்பட்ட பகுதிகளில் ஆட்டு இறைச்சிக் கடை நடத்துபவர்களுக்காக ஏற்கெனவே கட்டப்பட்ட ஆடுவதைக் கூடம் தற்போது ரூ.9.90 லட்சத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வதைக் கூடத்தில் இருந்து திடக்கழிவுகள் தனியே பிரிக்கப்பட்டு உரம் தயாரிக்கவும், திரவக் கழிவு சுத்திகரிப்பட்டு பயோ கேஸ் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது.திறப்பு விழாவில் நகராட்சி ஆணையர் சுந்தராம்பாள், நகர்மன்ற உறுப்பினர்கள், நகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**விவசாயத் தொழிலாளர் சங்கத்தினர் கோரிக்கை**

வடுகபாளையம் ஊராட்சிக்கு உள்பட்ட பிச்சாண்டம்பாளையத்தில் அடிப்படை வசதிகள் செய்து தரக் கோரி விவசாய தொழிலாளர்

சங்கத்தினர் அவிநாசி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் திங்கள்கிழமை மனு அளித்தனர்.

இதுகுறித்து ஊராட்சி ஒன்றிய துணை ஆணையாளர் ராஜகோபாலிடம் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:

பிச்சாண்டம்பாளையத்தில் கழிப்பிட வசதி இல்லாததால் கிராம மக்கள் அனைவரும் திறந்த வெளியை கழிப்பிடமாகப் பயன்படுத்தி வருகின்றனர். சாக்கடை வசதி இல்லாததால் கழிவுநீர் தேங்கிக் காணப்படுகிறது. இதனால் கொசுக்கள் உற்பத்தி அதிகரித்து, டெங்குக் காய்ச்சல் போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன. எனவே, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**எழுமாத்தூர் விற்பனைக் கூடத்தில் ரூ. 19 லட்சத்துக்கு வர்த்தகம்**

எழுமாத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ. 19 லட்சத்துக்கு தேங்காய், கொப்பரை வர்த்தகம் திங்கள்கிழமை நடைபெற்றது.

எழுமாத்தூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 438 மூட்டைகளில் 15 ஆயிரத்து 573 கிலோ எடையுள்ள கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 83.65-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 79.35-க்கும், இரண்டாம் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 81.05-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 56.50-க்கும் என மொத்தம் ரூ. 12 லட்சத்து 51 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது.

அதேபோல, 27 டன் எடையுள்ள 79 ஆயிரத்து 731 தேங்காய்கள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. இதில், அதிகபட்சமாக டன் ரூ. 24

ஆயிரத்து 795-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 22 ஆயிரத்து 650-க்கும் என மொத்தம் 6 லட்சத்து 66 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது. மொத்தம் ரூ. 19 லட்சத்து 17 ஆயிரத்துக்கு கொள்முதல் நடைபெற்றது.

**குன்னூர் ஏல மையத்தில் தேயிலைத் தூள் தேக்கம்**

குன்னூர் சிடிடிஏ ஏல மையத்தில், இந்தாண்டுக்கான 32-ஆவது ஏலத்தில் 33 சதவீத தேயிலைத் தூள் தேக்கமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏலத்துக்கு, இலை ரகம் 12.87 லட்சம், டஸ்ட் ரகம் 4.74 லட்சம் என மொத்தம் 17.61 லட்சம் கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு வந்தது.

இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்றபோதும், தரமான தேயிலைத் தூளை மட்டுமே கொள்முதல் செய்ததால் 33 சதவீத தேயிலை தூள் தேக்கமடைந்தது. ஆனால் விலையில் எந்த மாற்றமும் இல்லை. இந்த வார விலை நிலவரப்படி, இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ரூ. 40 முதல் ரூ. 43-க்கும், உயர் வகை ரூ. 100 முதல் ரூ. 130-க்கும், டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ. 40 முதல் ரூ. 45-க்கும், உயர் வகை ரூ. 110 முதல் ரூ. 170-க்கும் விற்பனையானது.

**மேட்டூர் அணையிலிருந்து 13 ஆயிரம் கன அடி நீர் திறப்பு**

காவிரி டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணையிலிருந்து திறந்துவிடப்படும் நீரின் அளவு 13 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டது.

மேட்டூர் அணையில் இருந்து குறுவை, சம்பா, தாளடிப் பயிர்களுக்கு ஆண்டுதோறும் ஜூன் 12-ஆம் தேதி முதல் ஜனவரி 28-ஆம் தேதி வரை தண்ணீர் திறப்பது வழக்கம்.

நிகழாண்டில் போதிய நீர் இருப்பு இல்லாததால் ஆக.9-ஆம் தேதி தாமதமாக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. ஞாயிற்றுக்கிழமை மாலை நொடிக்கு 5 ஆயிரம் கனஅடி வீதம் திறக்கப்பட்ட தண்ணீர் திங்கள்கிழமை காலை நொடிக்கு 13 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு 1673 கன அடியாகச் சரிந்துள்ளது. கோடை காலங்களில் மட்டுமே நீர்வரத்து 2000 கன அடிக்குக் கீழே சரியும். ஆனால், தற்போதே நீர்வரத்து சரிந்துள்ளது விவசாயிகளைக் கவலையடையச் செய்துள்ளது.

நீர் திறப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதால் நாள் ஒன்றுக்கு ஒரு டி.எம்.சி. தண்ணீர் நீர் இருப்பு குறையும். இப்போது மேட்டூர் அணையில் 60 டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே இருப்பு உள்ளது. இதில் மீன் வளத்தைப் பாதுகாக்கவும், குடிநீர்த் தேவைக்காகவும் அணையில் சுமார் 10 டி.எம்.சி. தண்ணீர் இருப்பு வைத்துக் கொள்ள வேண்டும்.

மீதமுள்ள தண்ணீரைக் கொண்டு 50 நாள்களுக்கு மட்டுமே பாசனத்துக்குத் திறக்க முடியும். நீர் திறப்பு மேலும் அதிகரிக்கப்பட்டால், குறைந்த நாள்களுக்கு மட்டுமே நீர் இருப்பு உள்ளது.

இதனால், சம்பா பயிர்களைக் காப்பாற்ற முடியுமா? என்ற அச்சம் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ளது.

திங்கள்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 96.20 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 1,673 கனஅடி வீதம் தண்ணீர்

வந்துகொண்டிருந்தது. பாசனத்துக்காக நொடிக்கு 13 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. நீர் இருப்பு 60.02 டி.எம்.சி.யாக இருந்தது.

**இயந்திர நடவு செய்யும் விவசாயிகளுக்கு மானியம்**

பொன்னமராவதி வட்டாரத்தில் எதிர்வரும் சம்பா பருவத்தில் இயந்திரம் மூலம் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ. 3000 மானியம் வழங்கப்பட உள்ளது என்று வேளாண் உதவி இயக்குநர் சி. ஜெயபாலன் தெரிவித்தார்.

இதுகுறித்து திங்கள்கிழமை அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் நெல் சாகுபடியில் இயந்திர நடவு முறையை கடைப்பிடிக்கும் விவசாயிகளை ஊக்குவிக்கும் விதமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ. 3000 வீதம் மானியம் வழங்கும் திட்டம் மாநிலம் முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, பொன்னமராவதி வட்டாரத்தில் எதிர்வரும் சம்பா பருவத்தில் இயந்திர நடவு முறையை கடைப்பிடித்தால், அவர்களுக்கு நடவு செய்வதற்கான செலவு தொகையில் 50% மானியமாக ஹெக்டேருக்கு ரூ. 3000 வழங்கப்பட உள்ளது.

விவசாயிகள் இத்திட்டத்தில் பயனடைய விரும்பினால் பாய் நாற்றங்கால் தயாரிக்க வேண்டும். பின்னர், வேளாண் பொறியியல் துறை அல்லது தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மூலம் நடவு இயந்திரத்தை பயன்படுத்தி 15 நாள் வயதுடைய நாற்றுகளை நடவு செய்ய வேண்டும்.

நடவு இயந்திரத்தை 50 சதவீத மானியத்தில் வாங்க விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை விரிவாக்க அலுவலர்களை தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

நடவு செய்த வயல்களை உதவி வேளாண்மை அலுவலர்கள் ஆய்வு செய்து புகைப்படத்துடன் பரிந்துரை செய்த பின்னர் மானியத் தொகை விவசாயிகளுக்கு வழங்கப்படும். இத்திட்டத்தில் பங்கு பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை உதவி அலுவலர்களை தொடர்பு கொண்டு பெயர்களை பதிவு செய்து பயனடைய வேண்டும்.

**தட்டுப்பாடின்றி உரங்கள் விநியோகிக்க வலியுறுத்தல்**

மேட்டூர் அணைத் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து, சாகுபடிப் பணிகள் தொடங்கப்படவுள்ளதால் உரங்கள் தட்டுப்பாடு இல்லாமல் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தஞ்சாவூரில் திங்கள்கிழமை நடைபெற்ற மாவட்ட ஊராட்சிக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

பனகல் கட்டடத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்கு மாவட்ட ஊராட்சித் தலைவர் அமுதாராணி ரவிச்சந்திரன் தலைமை வகித்தார்.

மணலூர் சுந்தர்ராஜன் பேசியது:

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் செயல்முறைக் கட்டணம் 0.8 சதவிதம் நிர்ணயிக்கப்படுகிறது. இதனால், பெரும் தொகையை இழக்க வேண்டிய நிலை உள்ளதால் கடன் பெறுபவர்கள் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகின்றனர். எனவே, இந்தச் செயல்முறைக் கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும். சம்பா சாகுபடிக்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படுவதால், விவசாயப் பணிகள் தொடங்கப்படவுள்ளன. உரங்கள் தட்டுப்பாடு இல்லாமல் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். திருநாகேஸ்வரம் ரயில் நிலையத்தில் நெல்லை பயணிகள் ரயில் நின்று செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

இதேபோல பட்டுக்கோட்டை, பேராவூரணி பகுதிகளில் கூடுதல் நெல் கொள்முதல் நிலையம் இல்லாததால், விவசாயிகள் கோடை பருவத்தில் சாகுபடி செய்யப்பட்ட நெல்லை விற்க முடியாமல் தவிக்கின்றனர். எனவே, அப்பகுதியில் நிரந்தர நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

செயலர் செல்லக்கண்ணு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**மண் ஆய்வின்படி உரமிடுவதால் அதிக மகசூல் பெறலாம்**

பெரம்பலூர் மாவட்டத்தில் மானாவாரி பருத்தி பயிரிட்டுள்ள விவசாயிகள் மண் ஆய்வின் மூலம் பரிந்துரைக்கப்படும் உரங்களை ஈடுவதால் அதிக மகசூல் பெறலாம் என்றார் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) ப. விஜயலட்சுமி. பெரம்பலூர் மாவட்டத்தில் பருத்தி பயிரிட்ட விவசாயிகள் அடியுரம் இடுவது அவசியம்.

மண் பரிசோதனை பரிந்துரைப்படி உரமிடுவது என்பது மண் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் மண்ணில் உள்ள சத்துக்களின் அளவு எஞ்சியது போக தேவைப்படும் உரங்களை இடுவதாகும். பொது பரிந்துரைப்படி உரமிடுவது என்பது, தமிழ்நாடு

வேளாண்மை பல்கலைக் கழகமானது ஒவ்வொரு மாவட்டத்தில் உள்ள மண் வகைகளுக்கேற்ப பயிர்களின் சீரான வளர்ச்சிக்கு தேவைப்படும் உரங்களை ஈடுவதாகும். அதன்படி, பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள கரிசல் மண் பகுதிகளில் பருத்தி பயிரிடுவதற்கு மொத்தமாக ஹெக்டேருக்கு 375 கிலோ சூப்பர் பாஸ்பேட், 260 கிலோ யூரியா, 100 கிலோ பொட்டாஷ் ஆகியவற்றில் சரிபாதி அடியுரமாகவும், மீதமுள்ள உரங்களை இரண்டாகப் பிரித்து முதல் மற்றும் 2-ஆவது மேல்உரங்களாக இடவேண்டும்.

அதேபோல, செம்மண் பகுதிகளில் பருத்தி பயிரிடுவதற்கு மொத்தமாக ஹெக்டேருக்கு 187 கிலோ சூப்பர் பாஸ்பேட், 130 கிலோ யூரியா, 50 கிலோ பொட்டாஷ் ஆகியவற்றில் சரிபாதி அடியுரமாகவும், மீதமுள்ள உரங்களை இரண்டாகப் பிரித்து முதல் மற்றும் 2ஆவது மேலுரங்களாக இடவேண்டும். மேற்கண்ட பரிந்துரைகளின் படி உரமிடுவதால் தேவையற்ற உரங்கள் இடுவதை தவிர்ப்பதன் மூலம் மண் வளம் குன்றுதலை தடுத்து, மண் வளத்தையும் பாதுகாக்க முடியும். மண்ணில் நன்மை பயக்கும் நுண்ணுயிர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுகிறது.

மண்ணின் தன்மை பாதுகாக்கப்படுவதோடு நிலையான மகசூலும் பெறலாம் என வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) ப. விஜயலட்சுமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தரமற்ற நெல் விதையால் 50 ஏக்கர் பயிர் பாதிப்பு: விவசாயிகள் புகார்**

தரமற்ற விதை நெல்லால் 50 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர் பூ பூக்காமல் உள்ளதாக விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

மாவட்ட ஆட்சியரகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர் கூட்டத்தில் விருத்தாசலம் வட்டம், சாத்தப்பாடி, ஊ.ஆதனூரைச் சேர்ந்த விவசாயிகள் என்.மூர்த்தி, ம.ராஜ்குமார் மற்றும் சிலர் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர். அதில் கூறப்பட்டுள்ளதாவது:

விருத்தாசலம் வட்டம், ஊ.ஆதனூர், சாத்தப்பாடி, விளக்கப்பாடி, தர்மநல்லூர் பகுதிகளில் தனியார் நிறுவனம் உற்பத்தி செய்த விதை நெல்லை அங்குள்ள விற்பனையாளர் விற்பனை செய்தார். 600 கிராம் எடை கொண்ட ஏடிடி-37 என்ற ரகத்தின் விதை நெல் சிப்பம் ரூ.880-க்கு

வாங்கப்பட்டு, சுமார் 50 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் விதை நாற்று விடப்பட்டு, மே மாதம் நடவு செய்யப்பட்டது.

இந்தப் பயிரிலிருந்து வரும் நெல்லை விதை வழங்கிய தனியார் நிறுவனமே விதைக்காக எடுத்துக் கொள்வதாக பதிவும் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், தற்போது நெற்பயிரில் பூ வரவில்லை. இதுகுறித்து வேளாண்மை அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு பயிரினை பார்வையிட்டு ஆய்வு செய்யுமாறு கோரிய போதும், அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. விதை நெல், அடி உரம், பயிர் நடவு, களை எடுத்தல், தண்ணீர்ப் பாய்ச்சுதல் உள்பட பல்வேறு பணிகளுக்காக ஏக்கருக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வரை விவசாயிகளால் செலவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், பயிரில் பூ வராததால் நெல் விளைச்சலாகவில்லை என்பது தெளிவாகிறது. எனவே நிலத்தினை கம்மாபுரம் வேளாண்மை அலுவலர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்ய வேண்டும். தரமற்ற விதையை உற்பத்தி செய்த நிறுவனம், விற்பனை செய்யப்பட்ட நிறுவனம் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், விவசாயிகளுக்கும் உரிய நஷ்ட ஈடு பெற்றுத்தர வேண்டும் என்று அந்த மனுவில் கோரியுள்ளனர்.

## 16-ல் இலவச மூலிகை பயிற்சி முகாம்

புதுவை சுற்றுச்சூழல் கல்விக் கழகம் சார்பில் இலவச மூலிகை பயிற்சி முகாம் வரும் 16ஆம் தேதி மேரி உழவர்கரை அய்யனார் தெருவில் மூலிகை தோட்ட வளாகத்தில் நடக்கிறது.

சுற்றுச்சூழல் கல்விக் கழகம், சிபிஆர் சுற்றுச்சூழல் கல்வி மையம் சார்பில் நடைபெறும் இப்பயிற்சி முகாமில் மூலிகைகளின் பயிர்கள், தாவரவியல் பெயர்கள், பயன்கள்,

பயன்படுத்தும் முறைகள், செயல் விளக்கங்கள் ஆகியன பற்றிய வகுப்புகள், மூலிகை தோட்டத்திலேயே நடத்தப்படும்.

மேலும் விதைகள் சேகரிப்பு, நாற்றங்கால் உருவாக்கம், மூலிகை தோட்டம், வீட்டுத்தோட்டம், மாடித்தோட்டம், களை எடுப்பு மண்புழு வளர்ப்பு, இயற்கை உரம்,

மூலிகை வைத்தியம், இயற்கை உணவு குறித்து பயிற்சி தரப்படும். நண்பகல் உணவு, சான்றிதழ் தரப்படும்.

விருப்பமுள்ளோர் தங்கள் பெயர், விவரங்களை கீழ்க்காணும் முகவரியில் நேரிலோ அல்லது தபாலிலோ அல்லது தொலைபேசி மூலமோ 14ஆம் தேதிக்குள் பதிவு செய்ய வேண்டும்.

சிஎஸ்.ராமநாதன், 1, முதல் தெரு, சாய்பாபா நகர், (சுப்பையா நகர் எதிரில்), அரியாங்குப்பம், புதுச்சேரி-7. தொலைபேசி-9629962973.

## புதுச்சேரியில் இடியுடன் பலத்த மழை

புதுச்சேரியில் திங்கள்கிழமை இரவு பலத்த மழை பெய்ததால், சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது.

வெப்பச்சலனம் காரணமாக மாலை அல்லது இரவு நேரங்களில் மழை பெய்து வருகிறது. பகல் நேரத்தில் அதிக வெப்பம் கொளுத்தினாலும் மாலை நேரத்தில் மழை பெய்வதால் குளிர்காற்று வீசுகிறது.

புதுவையில் திங்கள்கிழமை இரவு ஒரு மணி நேரம் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. இதனால் புதிய பேருந்து நிலையம், நேரு வீதி, காந்தி சாலை, வொயிட் டவுன் பகுதிகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது.

தென்மேற்கு பருவமழை பொய்த்ததால் விளைச்சல் குறைவு: துவரம் பருப்பின் விலை கிடுகிடு உயர்வு ஒரு கிலோ ரூ.150–க்கு விற்பனை



கர்நாடகத்தில் பீதர், கலபுரகி மாவட்டங்கள் துவரம் பருப்பின் களஞ்சியம் என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவிலேயே பீதர், கலபுரகி மாவட்டங்களில் தான் துவரம் பருப்பு அதிகம் விளைவிக்கப்படுகிறது.

துவரம் பருப்பு

ஏழை, நடுத்தர, பணக்கார வர்க்கத்தினர் என அனைவரது வீடுகளின் சமையல் அறையிலும் துவரம் பருப்பு கட்டாயம் இடம் பெற்றிருக்கும். அந்த அளவுக்கு துவரம் பருப்பின் தேவை அதிகமாக உள்ளது. ஆனால் தற்போது விளைச்சல் குறைவு காரணமாக துவரம் பருப்பின் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. இதனால் ஏழை மற்றும் நடுத்தர மக்களின் பட்ஜெட்டில் பெரிய இழப்பு ஏற்பட்டுள்ளது.

கர்நாடகத்தின் வடகர்நாடக பகுதிகளில் அதிகமான தானிய வகைகள் விளைவிக்கப்படுகிறது. அதிலும் பீதர், கலபுரகி மாவட்ட விவசாயிகள் தங்கள் விளைநிலங்களில் துவரம் பருப்பை அதிகம் பயிரிடுகிறார்கள். இங்கிருந்து தான் இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கும் துவரம் பருப்பு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்த ஆண்டு வடகர்நாடக பகுதியில்

வழக்கமாக பெய்யும் பருவமழை பொய்த்துள்ளதால், சராசரியாக கிடைக்க வேண்டிய துவரம் பருப்பு விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

<u>உற்பத்தி குறைவு</u>

இதன்காரணமாக எப்போதுமே இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு துவரம் பருப்பின் விலை ஒரு குவிண்டாலுக்கு ரூ.8,500 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சில்லரை விலையாக முதல்தர துவரம் பருப்பு ஒரு கிலோ ரூ.150 முதல் 160 வரை விற்பனை செய்யப்படுகிறது. கடந்த 2 ஆண்டுகளாக பீதர், கலபுரகி மாவட்டங்களில் சரியாக மழை பெய்யாததால், அந்த மாவட்டங்கள் வறட்சியின் பிடியில் சிக்கி உள்ளது. இதனால் துவரம் பருப்பின் உற்பத்தியும் குறைந்து காணப்படுகிறது.

பீதர் மாவட்டத்தில் வழக்கமாக 70 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் துவரம் பருப்பு பயிரிடுவார்கள். ஆனால் கடந்த 2 ஆண்டுகளாக போதிய மழை இல்லாத காரணத்தினால் இந்த ஆண்டு 66 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் தான் துவரம் பருப்பு பயிரிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் ஜூலை வரை 1.21 லட்சம் குவிண்டால் துவரம் பருப்பு மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வந்தது. ஆனால் இந்த ஆண்டு அதே காலகட்டத்தில் பருவமழை பொய்த்ததால் 42 ஆயிரம் குவிண்டால் துவரம் பருப்பு தான் விற்பனைக்கு வந்துள்ளது.

<u>விலை உயர்வு</u>

இதன்காரணமாகவே துவரம் பருப்பின் விலை விண்ணை தொடும் அளவுக்கு கிடுகிடுவென உயர்ந்துள்ளது. பீதர் மாவட்டத்தில் உள்ள ஏ.பி.எம்.சி. மார்க்கெட்டில் கடந்த 8–ந் தேதி நிலவரப்படி ஒரு குவிண்டால் துவரம் பருப்பு ரூ.8,430–க்கு விற்பனை செய்யப்பட்டது. அதே நேரத்தில் கலபுரகி ஏ.பி.எம்.சி. மார்க்கெட்டில் அதனைவிட கூடுதலாக விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த ஜனவரி மாதத்தில் ரூ.5,299–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த ஒரு குவிண்டால் துவரம் பருப்பு, கடந்த 5 மாதங்களுக்குள் படிப்படியாக

உயர்ந்து மே மாதத்தில் ரூ.6,875–க்கு விற்பனை செய்யப்பட்டது. ஜூன் மாதத்தில் மட்டும் ஒரு குவிண்டாலுக்கு ரூ.1,300 வரை உயர்ந்துள்ளது. தற்போது ஆகஸ்டு 8–ந் தேதி நிலவரப்படி இந்த விலை ரூ.8,430–ஆக உயர்ந்து அனைவரையும் கவலைக்குள்ளாக்கி உள்ளது.

<u>விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை</u>

இதில் கிடைக்கும் லாபத்தை விற்பனையாளர்களும், இடைத்தரகர்கள் மட்டுமே அனுபவிக்கிறார்கள். இதனை விளைவித்த விவசாயிகளுக்கு எதுவும் கிடைப்பதில்லை. துவரம் பருப்பு விலை இந்த அளவுக்கு உயர்வதற்கு காரணம் விற்பனையாளர்களும், இடைத்தரகர்களும் தான். ஏனெனில் இந்த ஆண்டு பருவமழை குறைந்து விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதால் துவரம் பருப்பு மார்க்கெட்டுக்கு குறைந்த அளவே வருகிறது.இதனை கருத்தில் கொண்ட விற்பனையாளர்கள், இடைத்தரகர்கள் துவரம் பருப்பை தங்கள் குடோன்களில் பதுக்கி வைக்கிறார்கள். அதன் தேவை அதிகரிக்கும் போது துவரம் பருப்பை அதிக விலைக்கு விற்பனை செய்கிறார்கள். விற்பனையாளர்கள், இடைத்தரகர்கள், விவசாயிகளிடம் இருந்து ஒரு குவிண்டால் துவரம் பருப்பை ரூ.5 ஆயிரத்துக்கு தான் வாங்குகிறார்கள். அதனை பதுக்கி வைத்து, தேவை அதிகரிக்கும் போது அதிக விலைக்கு விற்பனை செய்து பெரிய லாபம் அடைகிறார்கள்.

<u>ரூ.9 ஆயிரத்தை தாண்டும்</u>

தென்மேற்கு பருவமழை பொய்த்துள்ளதால், துவரம் பருப்பு பயிரிடுவதும் குறைந்துள்ளது. இதனால் புதிய துவரம் பருப்புகள் மார்க்கெட்டுக்கு வர இன்னும் சில காலங்கள் ஆகும். தற்போது மார்க்கெட்டில் பழைய துவரம் பருப்புகளே விற்பனை செய்யப்படுகிறது. இதனால் சில வாரங்களில் துவரம் பருப்பின் விலை ஒரு குவிண்டாலுக்கு ரூ.9 ஆயிரத்தை தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.இதனால் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் துவரம் பருப்பை மறக்க வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்படுவார்கள். இதில் மாநில அரசு தலையிட்டு துவரம் பருப்பை பதுக்கி

வைத்திருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது பொதுமக்களின் கோரிக்கையாக உள்ளது. அப்போது தான் துவரம் பருப்பின் விலையை கட்டுப்படுத்த முடியும்.

**பீதர் மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளில் துவரம் பருப்பின் விலை விவரம் பின்வருமாறு:–**

ஆண்டு விலை (குவிண்டால்)

2010–11 ரூ.5,0252011–12ரூ.4,4592012–13ரூ.5,1752013–14ரூ.5,000

2014–15ரூ.6,358

2015 ரூ.8,430

(ஆகஸ்டு வரை)

**கண்ணீரை வரவழைக்கும் வெங்காயத்தின் விலை**

துவரம் பருப்பின் விலை ஒரு பக்கம் உயர்ந்து கொண்டே போக, மற்றொரு பக்கம் வெங்காயத்தின் விலையும் உயர்ந்து வருகிறது. கர்நாடகத்தில் கடந்த 2 வாரங்களுக்கு முன்பு ஒரு கிலோ ரூ.30–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த வெங்காயம் தற்போது ரூ.65–க்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்தியாவில் ஒடிசா, கர்நாடகம், தமிழ்நாடு, மத்திய பிரதேசம், உத்தர பிரதேசம் ஆகிய பகுதிகளில் வெங்காயம் அதிகம் விளைவிக்கப்படுகிறது. தற்போது வெங்காயத்தின் உற்பத்தி வீழ்ச்சி அடைந்துள்ளதால், அதன் விலை கிடுகிடுவென உயர்ந்து கொண்டே செல்கிறது. முதல் தர வெங்காயம் ஒரு குவிண்டாலுக்கு ரூ.3,000–3,500 வரையும், 2–ம் தர வெங்காயம் ரூ.2,000– 2,500 வரையும் விற்பனை செய்யப்படுகிறது. தென்இந்தியாவில் வெங்காயத்தின் தேவை அதிகமாக உள்ளது. துவரம் பருப்பு, வெங்காயம் போன்ற பொருட்களின் விலை உயர்ந்து கொண்டு செல்வதால், ஏழை, நடுத்தர வர்க்க மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**கடும் வறட்சி–விவசாயிகள் தொடர் தற்கொலை: தசரா விழா கொண்டாட்டம் குறித்து 3 நாட்களில் முடிவு அறிவிப்பு உயர்மட்ட குழு கூட்டத்திற்கு பின் சித்தராமையா பேட்டி**



பெங்களூரு

கடும் வறட்சி மற்றும் விவசாயிகள் தொடர் தற்கொலை சம்பவங்கள் நடந்து வரும் நிலையில் மைசூரு தசரா விழா கொண்டாட்டம் குறித்து 3 நாட்களில் முடிவு அறிவிக்கப்படும் என்று சித்தராமையா கூறினார்.

<u>தசரா விழா கூட்டம்</u>

இந்த ஆண்டு உலக புகழ் பெற்ற மைசூரு தசரா விழாவை கொண்டாடுவது குறித்து முதல்–மந்திரி சித்தராமையா தலைமையிலான உயர்மட்ட குழுவின் ஆலோசனை கூட்டம் பெங்களூரு விதான சவுதாவில் நேற்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மந்திரிகள் சீனிவாச பிரசாத், மகாதேவ பிரசாத், தேஷ்பாண்டே, மகாதேவப்பா மற்றும் மைசூரு மாவட்ட மக்கள் பிரதிநிதிகள், மைசூரு மாவட்ட கலெக்டர் ஷிகா உள்பட அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் தசரா விழாவை எப்படி கொண்டாடுவது என்பது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. இதில் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

இதில் பேசிய சிலர் மாநிலத்தில் வறட்சி நிலவுவதாகவும், அதனால் தசரா விழாவை எளிமையாக கொண்டாட வேண்டும் என்றும் வலியுறுத்தினர். மற்ற சிலர், தசரா விழா ஒரு பாரம்பரிய விழா ஆகும். இந்த விழாவை வழக்கம் போலவே சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று வலியுறுத்தினார்கள்.

<u>சித்தராமையா பேட்டி</u>

இந்த கூட்டம் முடிந்த பிறகு சித்தராமையா நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:–

கர்நாடகத்தில் ஒருபுறம் கடுமையான வறட்சி நிலவுகிறது. மற்றொருபுறம் விவசாயிகள் தற்கொலை செய்யும் சம்பவங்கள் நிகழ்கின்றன. இதனால் தசரா விழாவை எளிமையாக கொண்டாடுவது நல்லது என்று கூட்டத்தில் பேசியவர்கள் ஆலோசனைகளை தெரிவித்தனர். எளிமையின் அளவை முடிவு செய்வதற்கு முன்னதாக எதிர்க்கட்சி தலைவர்கள், இலக்கியவாதிகள் உள்ளிட்டோருடன் கலந்து பேசி அவர்களின் ஆலோசனை பெறுவது முக்கியம் என்பது எனது நிலைப்பாடு ஆகும்.

மேலும் இந்த விஷயம் குறித்து மந்திரிசபை கூட்டத்திலும் விரிவாக விவாதிக்கப்படும். இன்னும் 2, 3 நாட்களில் தசரா விழா கொண்டாட்டம் குறித்த முடிவு அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும்.

இவ்வாறு சித்தராமையா கூறினார்.

<u>மந்திரி சீனிவாச பிரசாத்</u>

முன்னதாக நடந்த கூட்டத்தில் வருவாய்த்துறை மந்திரியும், மைசூரு மாவட்ட பொறுப்பு மந்திரியுமான சீனிவாச பிரசாத் பேசுகையில், “மாநிலத்தில் மழை குறைந்துள்ளது. 1972–ம் ஆண்டுக்கு பிறகு கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் ராஜஸ்தானுக்கு அடுத்தபடியாக வறட்சியில் கர்நாடகம் 2–வது இடத்தில் உள்ளது. இந்த சூழ்நிலையில் தசரா விழா கொண்டாட்டம் குறித்து அரசு ஆழ்ந்து ஆலோசித்து முடிவு எடுக்க வேண்டும்“ என்றார்.

**சாகுபடி செய்த நெற்பயிரில் கதிர்கள் வராததால் பல லட்சம் ரூபாய் இழப்பு நஷ்ட ஈடு கேட்டு கலெக்டரிடம் மனு**



கடலூர்

விருத்தாசலம் பகுதியில் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிரில் கதிர்கள் வராததால் விவசாயிகளுக்கு பலலட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதுதொடர்பாக கலெக்டரிடம் விவசாயிகள் மீண்டும் புகார் செய்தனர்.

<u>பல லட்சம் ரூபாய் இழப்பு</u>

தாராபுரத்தைச்சேர்ந்த விதை நிறுவனத்திடம் இருந்து விதை நெல்லை வாங்கி கத்தாழையில் உள்ள தனியார் ஏஜென்சியொன்று விவசாயிகளுக்கு விற்பனை செய்தது. இந்த ஏஜென்சியில் விருத்தாசலம் அருகே உள்ள சாத்தப்பாடியைச் சேர்ந்த விவசாயிகள் வாசுதேவன், மூர்த்தி, ராஜ்குமார் ஆகியோர் விதை நெல் வாங்கி சாகுபடி செய்தனர். அதன் மகசூலை விதைக்காக தாராபுரம் விதை நெல் நிறுவனமே வாங்கிக்கொள்வதாக உறுதி அளித்திருந்தது.

ஆனால் 3 மாதங்களாகியும் நெற்பயிர் செழித்து வளர்ந்ததே தவிர நெற்கதிர்கள் வரவில்லை. பச்சைப்பசேலென ஓங்கி வளர்ந்திருந்த நெற்பயிர்களில் கதிர்கள் வராததால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்தனர். இதனால் விவசாயிகளுக்கு பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது.

மனுகொடுத்தும் நடவடிக்கையில்லை

இது பற்றி கடந்த வாரம் அவர்கள் 3 பேரும் கடலூருக்கு வந்து மக்கள் குறைதீர் கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் எஸ்.சுரேஷ்குமாரை சந்தித்து மனு கொடுத்தனர். மனுவில், கலவன் உள்ள விதைகளை விதைநெல் நிறுவனம் வினியோகித்ததால் நெற்பயிரில் கதிர்கள் வரவில்லை, எனவே சம்பந்தப்பட்ட விதைநெல் நிறுவனத்திடம் இருந்து நஷ்டஈடு வாங்கித்தர வேண்டும் என்று கூறியிருந்தனர்.

ஆனால் ஒருவாரம் ஆகியும் கலெக்டரிடம் கொடுத்த மனுவின் மீது எவ்வித நடவடிக்கையும் வேளாண்மைத்துறை அதிகாரிகளால் எடுக்கப்படாததால், விவசாயிகள் வாசுதேவன், மூர்த்தி, ராஜ்குமார் ஆகிய மூவரும் நேற்று மீண்டும் மக்கள் குறைதீர் கூட்டத்துக்கு வந்து மனு கொடுத்தனர்.

**தாவரவியல் ஆராய்ச்சிக்காக கரூர் அரசு கலைகல்லூரிக்கு ரூ.15¼ லட்சம் நிதி உதவி பல்கலைக்கழக மானியக்குழு வழங்குகிறது**




கரூர்,

தாவரவியில் ஆராய்ச்சிக்காக கரூர் அரசு கலைக்கல்லூரிக்கு ரூ.15¼ லட்சம் நிதி உதவியை பல்கலைக்கழக மானியக்குழு வழங்க உள்ளது.

தாவரவியல் பேராசிரியர்

கரூர் அரசு கலைக்கல்லூரியில் தாவரவியல் துறையில் உதவி பேராசிரியராக பணியாற்றுபவர் கார்த்திகேயன். இவர் தாவரவியல் ஆராய்ச்சி மேற்கொள்ள, பல்கலைக்கழக மானியக்குழு ரூ.15 லட்சத்து 30 ஆயிரம் நிதி உதவி வழங்க உள்ளது. இது குறித்து பேராசிரியரிடம் கேட்ட போது அவர் கூறியதாவது:–

புற்று நோய், சர்க்கரை நோய் ஆகிய நோய்களை தீர்க்கும் குணம் கொண்ட வேளைச்செடி (கிளியோம் கைனாண்ட்ரா) அதிக அளவில் வளர்ப்பதற்கான ஆராய்ச்சியில் ஈடுபட உள்ளோம். இதே போன்று பூஞ்சைகளை கொண்டு அதிக மருத்துவ குணம் கொண்ட

வேதிப்பொருட்களின் அளவை அதிகரிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட உள்ளோம். இதற்காக பல்கலைக்கழக மானியக்குழு ரூ.15 லட்சத்து 30 ஆயிரம் நிதி உதவி வழங்க உள்ளது. இந்த தொகையினை ஒவ்வொரு கட்டமாக வழங்குவார்கள். இதை வைத்து ஆராய்ச்சியில் ஈடுபட உள்ளோம்.

ஆய்வு

அதன்படி இந்த ஆராய்ச்சிக்காக பல்கலைக்கழக மானியக்குழு என்னை முதன்மை ஆய்வாளராகவும், என்னுடன் ஒரு மாணவர் இணைந்து பணியாற்ற நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஆராய்ச்சியில் ஈடுபட விருப்பம் உள்ள மாணவர்கள் கரூர் அரசு கலைக்கல்லூரி தாவரவியல் துறைக்கு விண்ணப்பிக்கலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

இது குறித்து கல்லூரி முதல்வர் பாரியிடம் கேட்ட போது, கடந்த 5 ஆண்டுகளாக கரூர் அரசு கலைக்கல்லூரியில் தாவரவியல் துறையானது ஆராய்ச்சிப்படிப்பில் வேகமாக வளர்ந்து வருகிறது. அதன்படி 2 பெரு ஆய்வு திட்டம், 2 சிறு ஆய்வு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதே போன்று மாணவர் ஆய்வு திட்டங்கள் 2 உள்பட எண்ணற்ற ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

**கருப்பு பன்னீர் திராட்சை விளைச்சல் குறைவு விவசாயிகள் கவலை**



கம்பம்,

கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் கருப்பு பன்னீர் திராட்சை விளைச்சல் குறைந்தது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>கருப்பு பன்னீர் திராட்சை</u>

தேனி மாவட்டம் கம்பம் பகுதியை சுற்றியுள்ள கிராமங்களில் கருப்பு பன்னீர் திராட்சை அதிகளவில் பயிர் செய்யப்பட்டுள்ளது. மேலும் சின்னமனூர் அருகே உள்ள ஓடைப்பட்டி மற்றும் தென்பழனி உள்ளிட்ட பகுதிகளில் விதையில்லா ரக திராட்சையும் பயிர் செய்யப்பட்டுள்ளது.

பெரும்பாலான விவசாயிகள் பழம் அறுவடைக்கு தயாரான நிலையில் இருக்கும் போது வியாபாரிகளுக்கு மொத்தமாக ஒரு தொகைக்கு பேசி விற்பனை செய்கின்றனர். சென்னை, கொல்கத்தா, டெல்லி உள்ளிட்ட பகுதிகளுக்கும் விற்பனைக்கு அதிகம் கொண்டு செல்கின்றனர்.

<u>விளைச்சல் குறைவு</u>

இந்நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு திராட்சை கொடிகளில் ஏற்பட்ட செவட்டை நோய் தாக்குதலின் காரணமாக தற்போது பழம் வரத்து முற்றிலும் குறைந்துள்ளது. விளைச்சல் அதிகமாக இருக்கும்

காலங்களில் திராட்சை அதிகமாக கொத்து, கொத்தாக காய்த்து தொங்கும். ஆனால் தற்போது இப்பகுதியில் உள்ள பெரும்பாலான தோட்டங்களில் விளைச்சல் குறைந்ததால் அதிக இடைவெளி விட்டு காய்த்து தொங்குகிறது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், 'நல்ல விளைச்சல் இருந்தால் ஏக்கருக்கு 4,500 கிலோ வரை அறுவடை செய்யலாம். இந்த நேரத்தில் விலை கிலோ ரூ.20 முதல் ரூ.25 வரை விற்பனை செய்தாலே போதுமானதாக இருக்கும். ஆனால் தற்போது நோய் தாக்குதலின் காரணமாக ஒரு ஏக்கருக்கு 1,000 கிலோ அளவிற்குகூட அறுவடை செய்ய முடியவில்லை. விலை அதிகமாக இருந்தாலும் விளைச்சல் இல்லாததால் விவசாயிகளுக்கு நஷ்டமே ஏற்படுகிறது' என்றனர்.

**3 லட்சத்து 75 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி அமைச்சர் காமராஜ் தகவல்**



திருவாரூர் மாவட்டத்தில் சம்பா, தாளடி பருவத்தில் 3 லட்சத்து 75 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடிசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது என்று அமைச்சர் காமராஜ் கூறினார்.

விழிப்புணர்வு முகாம்

திருவாரூர் அருகே காட்டூரில் சம்பா நெல் எந்திர முறை நேரடி விதைப்பு விழிப்புணர்வு முகாம் நடந்தது. முகாமுக்கு மாவட்ட கலெக்டர் மதிவாணன் தலைமை தாங்கினார்¢. உணவு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ஆர்.காமராஜ் கலந்து கொண்டு நேரடி நெல் விதைப்பு முறையை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

மேட்டூர் அணை திறப்பு

நடப்பு ஆண்டு 12 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் பரப்பில் காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகள் சம்பா சாகுபடி மேற்கொள்ளும் வகையில் பாசனத்துக்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் சம்பா மற்றும் தாளடி பருவங்களில் இயல்பாக 3

லட்சத்து 40 ஆயிரத்து 38 ஏக்கரில் சாகுபடி மேற்கொள்ளப்படும். ஆனால் தற்போது சரியான தருணத்தில் திறந்து விடப்பட்ட காவிரி நீரை பயன்படுத்தி திருவாரூர் மாவட்டத்தில் இந்த ஆண்டு சம்பா மற்றும் தாளடி பருவத்தில் 3 லட்சத்து 75 ஆயிரத்து 250 ஏக்கரில் நெல் பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 1 லட்சத்து 75 ஆயிரம் ஏக்கர் பரப்பில் நேரடி நெல் விதைப்பு முறையில் சாகுபடி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

தினகரன்

**மேட்டூர் அணையில் 60 நாளுக்கு மட்டுமே தண்ணீர் இருப்பு**



மேட்டூர்: மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 1600 கனஅடியாக சரிந்த நிலையில், பாசனத்திற்கு வினாடிக்கு 13 ஆயிரம் கனஅடி நீர் திறந்துவிடப்படுகிறது. இதனால், அணையின் நீர்மட்டம் தினமும் ஒரு அடி சரியும் நிலை உருவாகி உள்ளது. இதேநிலை நீடித்தால் அணையில் இருந்து 60 நாட்களுக்கு மட்டுமே பாசனத்திற்கு தண்ணீர் திறக்க முடியும் என்ற அபாயம் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். மேட்டூர் அணையின் மூலம் காவிரி டெல்டா பகுதிகளில் சுமார் 16 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. அணையின் நீர்மட்டம் 96 அடியைத் தாண்டி திருப்திகரமான நிலையை எட்டியதால், டெல்டா பகுதிகளின் சம்பா சாகுபடிக்காக அணையில் இருந்து நேற்று முன்தினம் மாலை தண்ணீர் திறக்கப்பட்டது. துவக்கத்தில் வினாடிக்கு 5 ஆயிரம் கனஅடியாக திறக்கப்பட்ட தண்ணீர் படிப்படியாக அதிகரிக்கப்பட்டது.

நேற்று காலை நிலவரப்படி வினாடிக்கு 13 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. அதே நேரத்தில் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 1673 கனஅடியாக சரிந்துள்ளது. நீர்வரத்தை விட பலமடங்கு அதிகமாக பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுவதால் நீர்மட்டம் வேகமாக சரியத் தொடங்கி உள்ளது. நேற்று முன்தினம் 96.51 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று 96.20 அடியாக சரிந்துள்ளது. வரும் நாட்களில் பாசனத்திற்கு அதிகமாக தண்ணீர் தேவைப்படும் என்பதால் நீர் திறப்பு 20 ஆயிரம் கனஅடி வரை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படும். தற்போதைய நிலையிலேயே வரத்தும், திறப்பும் நீடித்தால் தினமும் ஒரு அடி வீதம் நீர் மட்டம் சரியும்.

இதே நிலை நீடிக்குமானால் பாசனத்திற்கு சுமார் 60 நாட்களுக்கு தான் தண்ணீர் திறக்க முடியும் என்ற அபாயம் உள்ளது. நேற்றைய நிலவரப்படி அணையில் 60.23 டிஎம்சி தண்ணீர் இருப்பு உள்ளது. சம்பா சாகுபடிக்கு 130 டிஎம்சி தண்ணீர் தேவை. எனவே, பருவமழை கைகொடுத்தால்தான்

டெல்டா பகுதியில் சம்பா சாகுபடி தப்பும். இல்லையெனில், பாதியில் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால், கடைமடை பகுதி விவசாயிகள் சாகுபடி செய்வதா, வேண்டாமா என்ற தவிப்பில் உள்ளனர். எனவே, காவிரி நடுவர் மன்ற இடைக்கால தீர்ப்பின்படி கர்நாடக அரசிடமிருந்து உரிய நீர் பங்கீட்டை கேட்டுப்பெற தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**சம்பா பருவ சாகுபடி விவசாயிகளுக்கு பயிற்சி**

வில்லியனூர், : கூடப்பாக்கம் உழவர் உதவியகத்தில் சம்பா முன்பருவ சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது. வேளாண்துறை பண்ணை தகவல் மற்றும் ஆலோசனை மையம் சார்பில் நடைபெற்ற இந்த முகாமிற்கு கூடுதல் வேளாண் இயக்குனர் ரவிபிரகாசம் தலைமை தாங்கினார். வேளாண் அலுவலர் நடராஜன் வரவேற்றார்.துணை வேளாண் இயக்குனர் முருகேசன் சம்பா முன்பருவ பயிற்சியின் நோக்கம் மற்றும் செயல்பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக புதுவை வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் ரொலின் பாஸ்கர், நரசிம்மன் ஆகியோர் நெல் சாகுபடி குறித்தும், அவற்றில் உற்பத்தியை பெருக்குவது குறித்தும் விளக்கினர். பின்னர் ஆத்மா திட்டதொழில்நுட்ப மேலாளர் சாந்தி பயிற்சியின் நோக்கம் குறித்து பேசினார். இதில் கூடப்பாக்கம், ஊசுடு, அகரம், சேந்தநத்தம், உளவாய்க்கால், பொறையூர் பகுதி கிராம விவசாயிகள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை கிராம விரிவாக்க பணியாளர்கள் மதிவதனன், பாலசுந்தரம், நாராயணசாமி, கிருஷ்ணன்

ஆகியோர் செய்திருந்தனர். உதவி வேளாண் அலுவலர் செல்வநாதன் நன்றி கூறினார்.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் இடுபொருள் வேளாண்மை உதவி இயக்குநர் தகவல்**

திருவாடானை, : விவசாயிகளுக்கு மானிய விலையில் இடுபொருட்கள் வழங்கப்பட உள்ளது என திருவாடானை வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.திருவாடானை வேளாண்மை உதவி இயக்குநர் நாகராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: திருவாடானை வட்டார விவசாயிகளின் நலனுக்காகவும், பயிர் உற்பத்தியை அதிகரித்து வருமானத்தை உயர்த்தும் நோக்கிலும் வேளாண்துறை மூலம் பல்வேறு மானிய உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

நெல் நேரடி வரிசை விதைப்பு செய்யும் விவசாயிகளுக்கு தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் மூலம் ஹெக்டேருக்கு ரூ. 5ஆயிரம் வீதமும், நீடித்த நிலையான வேளாண் இயக்க திட்டத்தின் கீழ் 50 சதவீத விலையிலும், விதைகிராம திட்டத்தின் கீழ் 1 கிலோ விதைக்கு ரூ. 10 மானியம் என்ற அளவிலும் இடுபொருட்கள் திருவாடானை வேளாண்மை விரிவாக்க மையம் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் தங்களது பெயரினை திருவாடானை வேளாண்மை விரிவாக்க மையத்தினை அணுகி பதிவுசெய்ய கேட்டுக்கொள்கிறேன். மேலும் கூடுதல் விவரங்களுக்கு தங்கள் பகுதி வேளாண்மை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர், வட்டார தொழில்நுட்ப மேலாளர், வட்டார தொழில்நுட்ப உறுப்பினர்கள், அட்மா நண்பர்கள் ஆகியோரை தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் உதவி வேளாண்மை இயக்குனர் அலுவலக தொலைபேசி எண் 254340, வேளாண்மை விரிவாக்க மைய அலுவலக தொலைபேசி எண் 254080 ஆகிய எண்களிலும் விவசாயிகள் தொடர்புகொண்டு அரசு நலத்திட்ட

உதவிகள் பற்றி கேட்டு தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**உச்சிப்புளி அருகே மீன் பதப்படுத்தும் பூங்கா கலெக்டர் தகவல்**

ராமநாதபுரம், : உச்சிப்புளி அருகே மீன் பதப்படுத்தும் பூங்கா அமைக்கப்பட உள்ளது என கலெக்டர் நந்தகுமார் தெரிவித்தார். ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகத்தில் மாவட்ட அளவிலான குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் முதலீட்டாளர்கள் சிறப்பு முகாம் நடந்தது. மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்(பொ) கயாஸ், சிவகங்கை சிட்கோ கிளை மேலாளர் ராஜாராம், ஆகியோர் முகாம் குறித்து விளக்கினர். முகாமில் அமைச்சர் சுந்தர்ராஜ், எம்பி அன்வர்ராஜா உள்ளிட்ோடார் கலந்துகொண்டனர். ராமநாதபுரம் கலெக்டர் நந்தகுமார் முன்னிலை வகித்து பேசியதாதவது: உள்நாட்டில் தொழில் தொடங்குவதற்கான முதலீட்டாளர்களை உருவாக்கிடும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு துறையின் மூலம் தொழில் முதலீட்டாளர்களை அழைத்து கூட்டம் நடத்தப்படுகிறது. ராமநாதபுரம் மாவட்டத்திற்கு பல்வேறு தொழில் திட்டங்கள் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. ராமநாதபுரம் தொழில் வளர்ச்சியில் சற்றே பின்தங்கிய மாவட்டமாக இருந்தாலும், படிப்படியாக தொழில் துவங்குவதில் முன்னேறி வருகிறது. ராமநாதபுரம் நகரில் மிளகாய் வத்தல் குளிர்பதன கிடங்கு, சக்கரக்கோட்டையில் 100 ஏக்கரில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கப்பட உள்ளது. உப்பூர் அருகே ரூ. 10 ஆயிரம் கோடி மதிப்பில் ஆயிரத்து 600 அனல் மின் உற்பத்தி திட்டம், பரமக்குடி மற்றும் கமுதியில் 800 மெகாவாட் சூரிய ஒளி மின்திட்டம் அமைய உள்ளது. உச்சிப்புளி அருகே மீன்வளத்துறை சார்பில் மீன்பதப்படுத்தும் பூங்கா அமைப்பதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரும் நிலையில் உள்ளது.

மாவட்ட தொழில் மையத்தின் மூலம் இந்தியாவிலேயே படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நீட்ஸ் திட்டம், வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம், பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் மூலமாக, பல்வேறு மானியங்கள் வழங்கப்பட்டு வருகிறது. எனவே சிறு, குறு தொழில்களை துவங்க தொழில் முனைவோர் முன் வர வேண்டும். இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார்.

**வெண்டை, சுரைக்காய், சீனி அவரைக்காய் வரத்து அதிகரிப்பால் கிலோ ரூ.7க்கு விற்பனை**

மதுரை, :மாட்டுத்தாவணி சென்ட்ரல் மார்க்கெட்டில் வரத்து வெகுவாக அதிகரித்துள்ளதால், வெண்டைக்காய், சுரைக்காய், சீனி அவரைக்காய் விலை வெகுவாக குறைந்துள்ளது. சென்ட்ரல் மார்க்கெட் காய்கறிகள் வியாபாரிகள் சங்கத் தலைவர் முருகன் கூறியதாவது;மார்க்கெட்டுக்கு பெரும்பாலும், தேனி மாவட்டம் கம்பம் பகுதியில் இருந்து வெண்டைக்காய் வருகிறது. தற்போது, தென்மேற்குப் பருவமழை சீசனிலும், வெயில் கொளுத்துவதால், வெண்டைக்காய் வரத்து வெகுவாக அதிகரித்துள்ளது. கடந்த சில வாரங்களாக கிலோ ரூ.15 முதல் ரூ.18 வரை விற்பனையாகி வந்த வெண்டைக்காய் விலை சரிந்து கிலோ ரூ7க்கு விற்கிறது. இதனால், ஓட்டல்களுக்கு வெண்டைக்காயை அதிகளவு வாங்கிச் செல்கின்றனர். தேனி சுற்றுவட்டாரப்பகுதிகளில் இருந்து வரும், சுரைக்காய், திண்டுக்கல் நத்தம் பகுதியில் இருந்து வரும் சீனி அவரக்காய் வரத்தும் வெகுவாக அதிகரித்துள்ளதால் விலை குறைந்து சுரைக்காய், சீனி அவரைக்காய் கிலோ ரூ7க்கு விற்பனையாகின்றன.

**கொல்லிமலையில் அடைமழை**

சேந்தமங்கலம், : கொல்லிமலையில் கடந்த 15 நாட்களாக மழை இல்லாத காரணத்தால், வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு, பெய்ய தொடங்கிய மழை இரவு 12 மணி வரையிலும் பெய்தது. இதனால் ஆங்காங்கே உள்ள காட்டாறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. மேலும் ஆகாய கங்கை நீர்வீழ்ச்சி, மாசிலா அருவி நம்அருவி ஆகியவைகளில் தண்ணீர் அதிக அளவு கொட்டுகிறது. கொல்லிமலையில் பெய்த மழையின் காரணமாக, காரவள்ளி பொய்யாற்றில் தண்ணீர் வரத் தொடங்கியுள்ளது. நேற்று காலை முதல் கொல்லிமலையில் சீதோஷ்ண நிலை மாறி ஜில்லென்ற குளிர்ந்த காற்று வீசியது.

**புதன்சந்தையில் இறைச்சி மாடுகளின் விலை உயர்வு**

சேந்தமங்கலம், : நாமக்கல் மாவட்டம், புதன்சந்தையில் வாரந்தோறும் செவ்வாய் மற்றும் புதன்கிழமை ஆகிய இரு நாட்களில் மாட்டுசந்தை நடைபெறுவது வழக்கம். இங்கு சுற்றுப்பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கான மாடுகள் விற்பனைக்கு வரும். இதனை வாங்க கர்நாடகா, ஆந்திரா, கேரளா, பொள்ளாச்சி, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து வியாபாரிகள் மாடுகளை வாங்குவதற்காக வருவது வழக்கம்.

இங்கு இரு நாட்களில் மட்டும் கோடிக்கணக்கில் வர்த்தகம் நடைபெறும். இந்நிலையில் நேற்று கூடிய மாட்டுச்சந்தையில் சுற்றுப்பகுதியிலிருந்து குறைந்த அளவிலான மாடுகளே விற்பனைக்கு வந்திருந்தது. இதனால்

மாடுகளின் விலை உயர்ந்து விற்பனையானது. கடந்த வாரம் ரூ.22 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட இறைச்சி மாடு நேற்று ரூ.25 ஆயிரத்திற்கு விற்றது. ரூ.50 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட கறவைமாடு நேற்று ரூ.55 ஆயிரத்துக்கு விற்றது. கடந்த வாரம் ரூ.5 ஆயிரத்துக்கு விற்கப்பட்ட கன்றுக்குட்டிகள் நேற்று ரூ.8 ஆயிரத்துக்கு விற்றது.

**விருத்தாசலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் நிலக்கடலை விழிப்புணர்வு பெருவிழா**

விருத்தாசலம், : விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் காரீப் முன்பருவ நெல் மற்றும் நிலக்கடலை விழிப்புணர்வு பெருவிழா நடந்தது. மாவட்ட கலெக்டர் சுரேஷ்குமார் தலைமை தாங்கினார். கடலூர் எம்.பி அருண்மொழி தேவன், தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் முனைவர் ரவி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் கண்ணன் வரவேற்றார்.

விழாவில் அமைச்சர் சம்பத் கலந்து கொண்டு நெல் மற்றும் நிலக்கடலை பயிர் தொடர்பான கருத்துக்காட்சியை திறந்து வைத்து பார்வையிட்டார். பின்னர் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பாக நடத்தப்பட்ட வயல்வெளி ஆய்வு மற்றும் பரவலான செயல் திட்டங்களுக்கு இடுபொருட்களை பயனாளிகளுக்கு வழங்கி பேசினார். இதில் மாவட்ட வேளாண்மை இயக்குநர் தனசேகரன், துணை இயக்குநர்கள் இளங்கோ, ஹரிதாஸ், மண்டல ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் அனீசாராணி, முனைவர் நிர்மலாதேவி, நகர்மன்ற தலைவர்

அருளழகன், துணை தலைவர் சந்திரகுமார், ஒன்றியக்குழு தலைவர்கள் சுந்தரராஜன், செல்வராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**மண் அரிப்பை தடுக்க வெட்டிவேர் செடி நடவு செய்ய புவியியல் துறையினர் அறிவுரை**

குன்னூர் : நீலகிரி மாவட்டத்தில் மண் அரிப்பை தடுக்க வெட்டி வேர் நடவு செய்ய வேண்டும் என புவியியல் துறையினர் அறிவுரை வழங்கி உள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் கடந்த 2006, 2009 ஆகிய ஆண்டுகளில் மழையின் போது பேரிடர் ஏற்பட்டு 50க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன் 2 ஆயிரம் வீடு சேதமடைந்தது. இதனைதொடர்ந்து மத்திய சுரங்க புவியியல் துறை நிபுணர்கள் குழுவினர் நிலச்சரிவு மற்றும் மண் சரிவு ஏற்பட்டுள்ள பகுதிகளில் ஆய்வு செய்தனர்.அதன்படி பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வது குறித்து மாவட்ட நிர்வாகத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பரிந்துரை செய்தனர்.

ஆனால் இன்றுவரை புவியியல் துறையினுடைய பரிந்துரையை அதிகாரிகள் யாரும் பின்பற்றவில்லை. இயற்கைக்கு எதிராக கட்டுமான பணிகளும் ஜேசிபி இயந்திர பயன்பாடு மற்றும்ஆழதுளை கிணறு வெட்டுதல், பாறைகளை வெடி வைத்து அகற்றுதல் மலையை குடைந்து சாலை அமைத்தல் போன்ற பணி இன்றும் தொடர்கிறது.

வடகிழக்கு பருவமழை துவங்க இன்னும் ஒரு சில நாட்களே உள்ள நிலையில் இதுதொடர்பாக மீண்டும் ஆய்வு செய்து தற்போதைய நிலை குறித்து தெரிந்து கொள்ள ஏதுவாக புவியியல் துறை நிபுணர் குழுவினர் குன்னூர், கோத்தகிரி, ஊட்டி, குந்தா ஆகிய பகுதிகளில் ஆய்வு செய்து வருகின்றனர். இந்நிலையில், பெரும்பாலான இடங்களில் மண் அரிப்பு மற்றும் நிலச்சரிவு ஏற்படும் அபாயம் உள்ள பகுதிகளில் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக வெட்டி வேர்களை நடவு செய்ய வேண்டுமென நிபுணர்குழுவினர் வலியுறுத்தி உள்ளனர்.

இதுகுறித்து புவியியல் துறை நிபுணர்குழுவினர் கூறுகையில், ‘மலை

சரிவுகள் செங்குத்தான இடங்கள், சாலையோர மண் திட்டுகள் ஆகியவற்றில் மண்ணை கெட்டியாக பிடிக்க ஏதும் இல்லாததால் மண் சரிவு ஏற்பட்டு வருகிறது. இதனை தடுக்க வெட்டி வேர்களை நடவு செய்யும் பட்சத்தில் இதன் வேர்கள் பூமிக்கடியில் நீண்ட தூரம் சென்று மண்ணை இறுக்கி பிடித்து கொள்வதால் மண் அரிப்பையும், மண் சரிவையும் தடுக்க இயலும். எனவே மலை மாவட்டத்தில் வெட்டி வேர்களை தேவையான இடங்களில் நடவு செய்து மண் அரிப்பை தவிர்க்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்', என்றனர்.

**சம்பா சாகுபடிக்கு இயந்திரம் மூலம் நடவு செய்தால் எக்டேருக்கு ரூ.3000 வீதம் மானியம் வேளாண் துறை தகவல்**

பொன்னமராவதி : எதிர்வரும் சம்பா பருவத்தில் இயந்திரம் மூலம் நடவு செய்யும் விவசாயிகளுக்கு எக்டேருக்கு ரூ.3,000 வீதம் மானியம் வழங்கப்பட உள்ளதாக வேளாண் துறை தெரிவித்துள்ளது. இதுகுறித்து வேளாண் துறை உதவி இயக்குநர் ஜெயபாலன் கூறியதாவது: நெல் சாகுபடியில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி உற்பத்தியை பெருக்கும் பொருட்டு மத்திய, மாநில அரசுகளின் நிதியுதவியுடன் பல்வேறு திட்டங்கள் வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்மூலம் நெல் சாகுபடியில் இயந்திர நடவு முறையை கடைபிடிக்கும் விவசாயிகளை ஊக்கப்படுத்தும் விதமாக ஒரு எக்டேருக்கு ரூ.3,000 வீதம் மானியம் வழங்கும் திட்டம் மாநிலம் முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, பொன்னமராவதி வட்டாரத்தில் எதிர்வரும் சம்பா பருவத்தில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் இயந்திர நடவு முறையை கடைபிடித்தால் அவர்களுக்கு நடவுச் செய்வதற்கான செலவுத் தொகையில் 50 சதவீதம் மானியமாக எக்டேருக்கு அதிகபட்சமாக ரூ.3,000 வீதம் வழங்கப்பட உள்ளது. விவசாயிகள் இந்தத் திட்டத்தில்

பயனடைய விரும்பினால் பாய் நாற்றங்கால் தயாரிக்க வேண்டும். பின்னர் வேளாண் பொறியியல் துறை அல்லது தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி மூலம் நடவு இயந்திரத்தை பயன்படுத்தி 15 நாள் வயதுடைய நாற்றுக்களை நடவு செய்யவேண்டும். நடவு இயந்திரத்தை 50 சத மானிய விலையில் வாங்க விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களை தொடர்புகொண்டு பயன்பெறலாம். நடவு செய்த வயல்களை உதவி வேளாண்மை அலுவலர்கள் ஆய்வு செய்து புகைப்படத்துடன் பரிந்துரை செய்த பின்னர் மானியத் தொகை விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது. எனவே, இத்திட்டத்தில் பங்குபெற விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலர்களிடம் பெயர்களை பதிவு செய்து பயனடைய வேண்டும் என்றார்.

**இயற்கை உரம் தயாரிப்பு**

பொன்னமராவதி : பொன்னமராவதி பேரூராட்சியின் சார்பாக பிளாஸ்டிக் கழிவு மேலாண் திட்டத்தின் கீழ் இயற்கை உரம் மற்றும் மண்புழு உரம் தயாரித்தல் பணிகளை நர்சிங் கல்லூரி மாணவியர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். பொன்னமராவதி அடுத்த வலையபட்டி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அருகே இயற்கை உரம் மற்றும் மண்புழு உரம் ஆகியன பேரூராட்சி மூலம் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும் இயற்கை உரத்தைப் பயன்படுத்தி காய்கள் கீரைகள் ஆகியறை விதைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இப்பணியை பிஆர்கே செவிலியர் பயிற்சி கல்லூரி மாணவிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது இயற்கை உரம் மற்றும் மண்புழு உரம் தயாரிப்பது குறித்து அவர்களுக்கு செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. இதில் பேரூராட்சி தலைவர் ராஜா அம்பலக்காரர், துணைத் தலைவர் சதீஸ்குமார்,

பேரூராட்சி செயல் அலுவலர் கணேசன் ஆகியார் பங்கேற்று மாணவிகளின் சந்தேகங்களுக்கு தெளிவாக விளக்கம் அளித்தனர்.

பொன்னமராவதி : பொன்னமராவதி பேரூராட்சியின் சார்பாக பிளாஸ்டிக் கழிவு மேலாண் திட்டத்தின் கீழ் இயற்கை உரம் மற்றும் மண்புழு உரம் தயாரித்தல் பணிகளை நர்சிங் கல்லூரி மாணவியர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். பொன்னமராவதி அடுத்த வலையபட்டி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அருகே இயற்கை உரம் மற்றும் மண்புழு உரம் ஆகியன பேரூராட்சி மூலம் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும் இயற்கை உரத்தைப் பயன்படுத்தி காய்கள் கீரைகள் ஆகியறை விதைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இப்பணியை பிஆர்கே செவிலியர் பயிற்சி கல்லூரி மாணவிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது இயற்கை உரம் மற்றும் மண்புழு உரம் தயாரிப்பது குறித்து அவர்களுக்கு செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. இதில் பேரூராட்சி தலைவர் ராஜா அம்பலக்காரர், துணைத் தலைவர் சதீஸ்குமார், பேரூராட்சி செயல் அலுவலர் கணேசன் ஆகியார் பங்கேற்று மாணவிகளின் சந்தேகங்களுக்கு தெளிவாக விளக்கம் அளித்தனர்.

**தரமான விதைகளை தேர்வு செய்வது எப்படி?விவசாயிகளுக்கு செயல் விளக்கம்**

அறந்தாங்கி : அறந்தாங்கி அருகே தரமான விதைகளை தேர்வு செய்வது எப்படி? நுண்ணுயிர் விதைகளை நேர்த்தி செய்வது எப்படி? ஆகியன குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அடுத்த ஆவுடையார்கோவில் வட்டார வேளாண் வரிவாக்க மையத்தில் குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையம் சார்பில் கிராமப்புற பயிற்சி திட்டத்தின் கீழ் ஆவுடையார்கோவில் வட்டார விவசாயிகளுக்கு நடப்பு சம்பா பருவத்தில்

நெல் பயிரிடுவது தொடர்பாக தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி முகாமுக்கு ஆவுடையார்கோவில் வட்டார வேளாண் உதவி இயக்குநர் செல்லசுவாமி தலைமை வகித்தார்.

பயிற்சி முகாமில் கலந்துகொண்ட விவசாயிகளுக்கு குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய துணை வேளாண் இயக்குநர் சாந்தி, மற்றும் வேளாண் அலுவலர் செல்வி ஆகியோர் சிறப்பு பயிற்சி அளித்தனர். இதில் வேளாண் அலுவலர் செல்வி, சம்பா பருவத்தில் மேற்கொள்ள வேண்டிய தொழில் நுட்பங்களான விதை தேர்வு செய்தல், விதை நேர்த்தி மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை தொடர்பான அனைத்து தொழில்நுட்பங்களையும் எடுத்துரைத்தார். மேலும் தரமான விதை தேர்வு மற்றும் நுண்ணுயிர் விதை நேர்த்தி குறித்து செயல்விளக்கம் அளித்தார்.

துணை வேளாண் இயக்குநர் சாந்தி, புழுதி நிலத்தில் நெல் நேரடி விதைப்பு இயந்திரம் மூலம் விதைப்பு மற்றும் இயந்திரம் மூலம் நெல் நடவு செய்வது குறித்த தொழில் நுட்பங்களை எடுத்துரைத்தார். மேலும் ஆவுடையார்கோவில் வட்டாரத்தில் 2015-16ம் ஆண்டு செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள் குறித்து ஆவுடையார்கோவில் வட்டார வேளாண் உதவி இயக்குநர் செல்லச்சுவாமி எடுத்துரைத்தார். பயிற்சிமுகாமில் பங்கேற்ற அனைத்து விவசாயிகளுக்கும் ஊக்கத் தொகை வழங்கப்பட்டது. பயிற்சியில் கலந்து கொண்ட ஆவுடையார்கோவில் வட்டார அட்மா பண்ணை மகளிர் குழுவினருக்கு வேளாண் துணை இயக்குநர் செல்லசுவாமி பதிவேடுகளை வழங்கினார். முகாமில் ஆவுடையார்கோவில் வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள் மற்றும் அட்மா குழுவினர், வேளாண் விரிவாக்க மைய அலுவலர்கள் கலந்துகொண்டனர். அறந்தாங்கி : அறந்தாங்கி அருகே தரமான விதைகளை தேர்வு செய்வது எப்படி? நுண்ணுயிர் விதைகளை நேர்த்தி செய்வது எப்படி? ஆகியன குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அடுத்த

ஆவுடையார்கோவில் வட்டார வேளாண் வரிவாக்க மையத்தில் குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையம் சார்பில் கிராமப்புற பயிற்சி திட்டத்தின் கீழ் ஆவுடையார்கோவில் வட்டார விவசாயிகளுக்கு நடப்பு சம்பா பருவத்தில் நெல் பயிரிடுவது தொடர்பாக தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி முகாமுக்கு ஆவுடையார்கோவில் வட்டார வேளாண் உதவி இயக்குநர் செல்லசுவாமி தலைமை வகித்தார். பயிற்சி முகாமில் கலந்துகொண்ட விவசாயிகளுக்கு குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய துணை வேளாண் இயக்குநர் சாந்தி, மற்றும் வேளாண் அலுவலர் செல்வி ஆகியோர் சிறப்பு பயிற்சி அளித்தனர். இதில் வேளாண் அலுவலர் செல்வி, சம்பா பருவத்தில் மேற்கொள்ள வேண்டிய தொழில் நுட்பங்களான விதை தேர்வு செய்தல், விதை நேர்த்தி மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை தொடர்பான அனைத்து தொழில்நுட்பங்களையும் எடுத்துரைத்தார். மேலும் தரமான விதை தேர்வு மற்றும் நுண்ணுயிர் விதை நேர்த்தி குறித்து செயல்விளக்கம் அளித்தார்.

**துணை வேளாண் இயக்குநர் சாந்தி, புழுதி நிலத்தில் நெல் நேரடி விதைப்பு இயந்திரம் மூலம் விதைப்பு மற்றும் தரமான விதைகளை தேர்வு செய்வது எப்படி?விவசாயிகளுக்கு செயல் விளக்கம்**

இயந்திரம் மூலம் நெல் நடவு செய்வது குறித்த தொழில் நுட்பங்களை எடுத்துரைத்தார். மேலும் ஆவுடையார்கோவில் வட்டாரத்தில் 2015-16ம் ஆண்டு செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள் குறித்து ஆவுடையார்கோவில் வட்டார வேளாண் உதவி இயக்குநர் செல்லச்சுவாமி எடுத்துரைத்தார். பயிற்சிமுகாமில் பங்கேற்ற அனைத்து விவசாயிகளுக்கும் ஊக்கத் தொகை வழங்கப்பட்டது. பயிற்சியில் கலந்து கொண்ட ஆவுடையார்கோவில் வட்டார அட்மா பண்ணை மகளிர் குழுவினருக்கு வேளாண் துணை இயக்குநர் செல்லசுவாமி பதிவேடுகளை வழங்கினார். முகாமில் ஆவுடையார்கோவில் வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள் மற்றும் அட்மா குழுவினர், வேளாண் விரிவாக்க மைய அலுவலர்கள் கலந்துகொண்டனர்.